கலா நிலயம்:

V7, No.8. ௨௨, ௯, 1934

௧

கட
M211, N28k N
N34.7.8
199158

KALANILAYAM தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7] 1934 ஆ பிப்ரவரி மீ 22உ [No. 8

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 113
2. அப்பர் (64 கலை-இதிகாசம்-கந்தன் சரிதை) E. N. தணிகாசல முதலியார், B.A.B.L. 115
3. தமிழ்ப் பாடம் வில்லிபாரதம்--கிருஷ்ணன் தூதுச் சருக்கம் 116
4. ஷேக்ஸ்ப்பியர் நாடகக் காட்சித்திரட்டு (ஜான் அரசன்) T. S. நடராஜப்பிள்ளை B.A.B.L. 118
5. மதுரைக் கோவை. (முன்னுறவுணர்தல், நாணநாட்டம், நடுங்கநாட்டம், சேட்படை) S. வையாபுரிப் பிள்ளை, B.A.B.L. 120
6. நம்மாழ்வார் வைபவம் (6-ம்பத்து, 4-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 121
7. ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை (தெர தீய்யகராதா) P. B. ஸ்ரீநிவாசாச்சாரியார், B. A. 123
8. பழமுதிர் சோலை, (தருமமேன் சாலுந்தமிழ்) "சபரி" 124
9. கம்பராமாயணம்—(அநுமப் படலம்) T. N. சேஷாசலம் B.A.B.L. 125
10. குறையில்லாக் கல்வி (ஒரு சிறு கதை) K. S. முத்துராமலிங்கம் M.A. 127
11. வர்த்தமானம் 128

கலாநிலயம்

கல்சரின் அவசியம் 1.

இக்காலம் உய்ந்து கரையேறக் கல்சர் (Culture) அன்றிக் கைதந்து உதவவல்லது வேறொன்றுமில்லை என்பதையே இக்கலாநிலயம் எல்லாவகையினும் வற்புறுத்திவருகின்றது. இக்கல்சரின் பயனை ஒருபுறமும், மற்றவைகளின் பயனின்மையையும் பொல்லாங்கையும் மறுபுறமும், எடுத்தெடுத்து விளக்குவதே இக்காலத்திற்கு உரிய கடன். எம் தலையங்கங்களின் நோக்கம் அதுவே. இத் தலையங்கங்களில் அடங்கிய விடயங்களின் பொருளும் பயனும் ஐயமற விளங்குவதற்குக் 'கல்சர்' என்பதன் இலக்கணமும், அதனைச் சார்ந்த பின்னும் சில செய்திகளின் தன்மையும் தெரிந்திருக்கவேண்டியது அவசியம். இவைகளை முன் 1929 வருடத்தில் விரிவாக விளக்கி எழுதியிருக்கின்றோம். ஆயினும், இப்பொழுது நம் சந்தா நண்பர்களாயிருப்பவர்களில் மிகப் பெரும்பாலோர் அவ் வாண்டிற்குப் பிறகு சேர்ந்தவர்களாகவே இருத்தலானும், இன்னவர்களில் பலர் அவ்வாண்டு இதழ்களைப் பெற்றுப் படிக்க விரும்புகின்றார்களாயினும் அவை எம்வயின் கிடைக்காமையானும், அந்தத் தலையங்கங்களை மீண்டுமோர்முறை பெயர்த்தெழுதுதல் நலமெனநாம் நினைத்தலானும், அவைகளை ஈண்டுத் தருகின்றோம். நண்பர்கள் கருத்தூன்றி இதனை ஓதிஆராய்ந்து உணர்ந்துகொள்ளும்படி வேண்டுகின்றோம்—

ஆங்கிலத்தில் 'கல்சர்' (Culture) என்னும் மொழிக்கு நேராகப் பொருள்தரவல்ல சொல் தமிழில் தேர்வது அருமையாயிருக்கின்றது. கல்வியென்னும் பதமும், கல்சர் என்னும் பதமும் ஒலியால் மாத்திரமன்றிப் பொருளானும் ஓரே பகுதியினடியாகப் பிறந்திருப்பனபோல் தோன்றினாலும் நாம் வழங்கிவரும் முறையில் 'கல்வி' என்னுமிச்சொல் 'கல்சர்' என்னும் அம்மொழி குறிக்கொள்ளும் கருத்துக்கள் முழுவதையும் தருகின்றதில்லை. ஒருவனை நோக்கி நாம் 'இவன் கல்வியுடையவன் என்று கூறும்போது, 'சிலவேனும் பலவேனும் நூல்களில் அவன் பயின்றுள்ளவன்' என்னும் செய்தியைத் தெரிவிக்கலாகின்றதேயன்றி, நற்குணநற்செய்கைகளில் பழக்குவித்துக் கண்ணோட்டம் மென்மொழி முலிய தன்மைகளை அளிக்கவல்ல நூல்களில் அவன் பயின்றுளன் என்றேனும், மற்றுப் பயின்றிருப்பினும் அப்பயிற்சியால் எய்துதற்குரிய நற்பயன்களை அவன் பெற்றுளன் என்றேனும் அவ்வாசகம் தெரிவிக்காதொழிகின்றது. அதுவுமன்றி, கண்ணோட்டம் இன்சொல் வெருவந்தசெய்யாமை ஒப்புரவு முதலிய மேம்படுதன்மைகள் இல்க்கிய இலக்கணங்களை விருப்பமுடன் கற்கவேண்டிய முறைப்படி கற்பதால் வந்தெய்துவது திண்ணம் எனினும், குலநலம் ஈன்றார் திறம் சான்றோர் உறவு இயற்கைவளம் ஆகியவைகளும் முன்னுரைத்த தன்மைகளை எய்துவிப்பதற்கு ஒவ்வோர் வழியில் உதவியாகிநிற்கின்றன. 'கல்வி' என்னுந் தமிழ்ச்சொல்லில் நூல்கல்வியும், சித்திரம் சங்கீதம் போன்ற கலைகளின் பயிற்சியும் அடங்குமேயல்லமால், அவைகளால் வருவதற்கிருக்கின்ற தூய நினைவிற்கும் செயலிற்கும் சொல்லிற்கும் இடனாய் உடனின்று உதவவல்ல இப்பின்னையவைகளும் அடங்கும்படி நாம் அச்சொல்லை வழங்குவதில்லை. 'கல்சர்' என்ற ஆங்கிலமொழி நூற்கல்வி கலைப்பயிற்சி மாத்திரமன்றி மனோவாக்குகாயங்களின் தூய்மைக்கு

ஆதாரமாயிருக்கின்ற பிற சாதனங்களையும் தன்னுள் கொண்டிருக்கின்றது. அதுவுமன்றி, இதுகல்வியாலும் கலைப்பயிற்சியாலும் மற்றைய சாதனங்களாலும் எய்திய நன்னிலையையுங் குறிக்கும். ஆதலின் இனி நாம் இஃதனைய கருத்துக்களை எடுத்துரைக்க வேண்டிய விடங்களில், பற்பல சொற்களால் அவைகளை அடிக்கடி எழுதாவண்ணம், 'கல்சர்' என்னுமவ் வாங்கிலச் சொல்லையே பயின்று வருவோம்.

அயலோர்பால் அன்பும், மற்றவர்க் குதவவேண்டுமென்னும் ஆர்வமும், மானுடமடமையை நீக்கி இடுக்கண்களைந்து எல்லோருமெங்கு மின்புற்றிருக்குமாறு செய்யவேண்டுமெனும் விருப்பமும், நாம் பிறந்தநாள் கண்டதினும் இவ்வுலகம் நன்மையும் இன்பமும் அதிகம் பெற்றிருக்க அகலும்நாள் காணவேண்டுமெனும் உயரியநோக்கமும், இவையனைய பொதுநலக்கூட்டுறவு வாழ்க்கைக்கு உரிய பிறகருத்துக்களையும் ஒருவனுக்கு எய்துவிப்பது கல்சர். அக்கருத்துக்களுடையவன் கல்சர் உடையவன். எல்லாம் செம்மையாயிருக்கவேண்டுமெனும் அவாவினின்று கனிந்த நிலை கல்சர்; மீண்டுமவ்வாவினை விளைவிப்பதும்கல்சரே. சுருங்கச்சொல்லின் செம்மையின்பால் சிந்தனையைச் செலுத்துவது கல்சரெனலாகும். புலனறிவைப் பகுத்தறிவாக்கி அப்பகுத்தறிவும் பரம்பொருள் சித்தமும் எவ்விடத்தும் தளராது ஓங்கி யாவற்றிற்கும் மேலாய் நிலைநிற்குமாறு புரிவது கல்சரின் கருமம்.

பொதுநலக் கூட்டுறவின் நன்மைக்கு இயன்ற நோக்கத்தை எய்துவிப்பது கல்சர் எனச் சொல்லினேம். ஆயினும் நாமிங்குக் காட்டியவகையில் கல்வி கேள்வி பெரியோர்துணை கல்சர் முதலிய இலாதார்க்கும், அந்நோக்கமும் ஆர்வமும் இருக்கலாகலாம்; இருக்கவுங் காண்கின்றோம். ஆயினும் அன்னவர் நல்லன செய்யவேண்டுமென்னும் ஆத்திரத்தால், பகுத்தறிவும் பரமன் திருவுள்ளத்தின் வண்ணமும் இன்னபடி இருக்குமென ஓராது விவகரிக்கப் புகுந்துவிடுகின்றனர். ஏதேனும் செய்யவேண்டுமெனும் அவசரம் புகுந்து அலைக்கின்றதாதலால், செம்மை எதுவென்று சிந்திப்பதற்கொத்த அமைதி இல்லாமற் போகின்றது. சிந்திப்பதைக் காட்டிலும் செய்வதே அவ் வவசரத்திற்குச் சிறப்பாகத்தோன்றுவதுபற்றி, முதிராத தன் மனத்தில் முளைத்தவெல்லாம் முழுதாய நலமுடைய கனிகளெனப் பிறர்க்களிக்கப் பறப்பது இயற்கையே. ஆதலின் அன்னவர்களுக்கிருக்கின்ற குற்றங் குறைகளே அவர்களது செய்கைகளுக்குஆதாரமாகின்றன. கல்சரின் தன்மையோ இன்னதன்று. நன்மைசெய்யவேண்டுமெனும் ஆர்வத்தினளவு, விஷயங்களைப் பகுத்தறியவேண்டுமெனும் ஆர்வமும் கல்சரினிடத்தில் இணங்கியிருக்கும். பகுத்தறிவின் முடிவு என்ன, கடவுளின் கருத்தென்ன, என்று கல்சருடையோர் ஒன்றினைச் செய்யப்புகுவதன்முன் பலகால் சிந்தித்தமர்வரே யல்லாது அம்முடிவிற்கும் கருத்திற்கும்பதிலாக, முதிராத தம் எண்ணங்களின் குற்றங்குறைகளை நடத்திவைக்க விரையமாட்டார். பகுத்தறிவும் திருவுளமும் ஆதாரமாயமையாது எச்செயலும் எந்தத் திட்டமும் நிலைத்திருக்காதென்பதைக் கல்சர் உடையவர் நன்கு அறிவார். ஆதலின், மானுட மடமையும் மிடியும் மறையவேண்டும் என்னுமிந் நோக்கம் அவர் கருத்தைவிட்டு எந்நாளும் நீங்காதிருப்பினும், திட்டங்கள் செய்து அதனை நடத்திவைக்கஎளிதில் நேர்வதில்லை. எதனைச் செய்யவேண்டும் என்றும் எப்படிச் செய்யவேண்டுமென்றும் தெரியாதபோது, ஆள்வினையும் சட்டதிட்ட நிர்மாணங்களும் எள்ளளவும் பயன்படாவென்பதை மறவாதார் கல்சருடையார் தாமே.

இத்தகைய கல்சருக்கோ ஓர் அவசியம் இந்நாளைப்போல் வேறெந்நாளிலும் ஏற்பட்டத்தில்லை. இதற்கு முன் நாமெல்லாம் நல்லதோ கெட்டதோ முன்னோர் வகுத்து வைத்திருந்த வழியைப் பின்பற்றிவந்தோம். கெட்டதைப் பார்க்கிலும் நல்லதே மிகுதி யென்பதற்கும் ஐயமில்லை. பகுத்தறிவுங் கடவுளின் சித்தமும் இவையிவை யென்ற மெய்யுணர்வுடைய பெரியோர், கல்சரின் கரை கண்டவ ரென்னத்தக்கவர், வேதங்களென்றும் சாஸ்திரங்களென்றும் புராணஇதிகாஸங்களென்றும் மதாசார குலாசார தேசா சாரங்களென்றும் பற்பல வகைகளில் காட்டி நம்மை நடக்குமாறு பணித்தனர். அந்நெறியைப் பின்பற்றிநடந்துவருமளவும் நாமுமொன்றுங் குறையுற்றிருந்ததாகத் தெரியவில்லை. எல்லாருமெங்கும் பெரும்பான்மை இன்புற்றிருந்தனர்என்றேஎல்லாச்சரித்திரகாரர்களுங்கூறுகின்றனர். அவ்வாறிருக்க, கல்சர் என்ற காற்றுந் தம்மேல் பட்டிராத பற்பலர், "அதுவன்று அறிவு; கடளின் கருத்து அது வன்று" என்று எளிதின் முன்னைய முறைகளையும் விதிகளையும் விலக்கிவிட்டுப் பொது நன்மையின்பால் வைத்த ஆர்வத்தால் தம்முடைய அறிவே அறிவென்றும், தம்முடைய கருத்தே கடவுளின்கருத்தென்றும் சொல்லத் துணிகின்றகாலமாயிற்று இந்நாள். வியாசர் வால்மீகி சங்கரர் என்னுமக் குணத்தொடு கல்வியும் புணர்ந்த குன்றனையவர் அறிவு பிழைத்ததென்பாரெனின், கடவுளின்சித்தம் அவர்கள்தாம் கண்டபடி அன்றென்பாரெனின், அவ்வாறு உரைப்பவர் நிலை என்னாம்! கற்றனவெல்லாம் எற்றே இவர்க்கென்று அடங்குதற்குக் கல்வி வேண்டுமாகையால், அக்கல்வியில்லாதார் கழறுவனகேட்டு வருந்துகின்றோமாயினும் வியப்பெய்துவதில்லேம்.

கல்சர் இல்லாதவர் கோட்டிகொள்வதால், பழைய பழக்க வழக்க விதி விலக்குகளில் நல்லனவும் பலபல கவிழ்ந்திடலாகி வாழ்க்கையின் நோக்கமும் பகுத்தறிவிற்குமாறுபட்டுப் பாழாகின்றது. அக்கடவுள் வாலறிவன் ஆதலால், உண்மையை ஆய்ந்தோய்ந்து பார்க்கும் பகுத்தறிவின் முடிவினிற்கு அயலானதெல்லாம் கடவுளின் கருத்திற்கும் அருளிற்கும் அயலானவைகளே ஆகும் என்பதற்கையமில்லை. ஆதலின்கடவுளின் கருத்திற் கிசைந்தவைகள் இன்னவாறு கழிக்கப்படுகின்றனவே யென்று எண்ணி ஏங்குகின்ற காலத்தில், அக்கடவுள் கருத்திற்கு நேர் எதிரானவைகள் புகுவதுங்கண்டு அஞ்சலாகின்றோம். கழிந்தன கழிக, மற்றொன்றும் புதியன புகாதிருந்தால் போதும் என்னும் நிலை வெருவிரைவில் எய்திவருகின்றது. பழைய வழக்கங்களின் பொருளும் பயனும் உணராமல் முன்னோர் விதியெனும் பான்மையால் சிறிதுகால முன்தொட்டுச் சனங்கள் கண்மூடித்தனமாய் ஒழுகிவந்தனர். பொருளும் பயனும்தெரியாமற் செய்வதொன்றும் நெடுநாள் நீடித்திராது. கடவுளின் கருத்தைத்தம் பகுத்திறிவைக் கொண்டு நடத்திவைக்கின்றோம் என்னும் மகிழ்வும் ஊக்கமும் இல்லாத செயல்கள் உயிரற்றவைகள் என்பது உண்மையே. அவ்வுயி ரற்றபின்னும் அவைகளை விட்டுவிடச் சிலகாலமாய் அஞ்சியிருந்தனர். இப்பொழுது அவ்வச்சம் நீங்கிச் சனங்கள் விவகரிக்கத் தலைப்பட்டது ஒருவிதத்தில் நல்லதொரு செவ்வி என்றே எண்ணவேண்டும். புதியதென்று எதனைப்புகட்டினும் ஜனங்கள் ஏற்கச் சித்தமாக விருக்கின்றனர். பழையவைகள் இழந்திருந்த உயிரைமீண்டும் அவைகளுக்குக் கொடுத்துப் புதியனவென்று மீண்டுமளித்தாலும் கொள்வர். அல்லது பிணம்வேண்டா, பேயேகொள் எனினும் ஏற்காதார் இலராகார். இந்நிலையில் பொதுஜன இயக்கங்களில் ஈடுபட்டிருப்பவர் பொறுப்புப் பின்னும் பன்மடங்கு அதிகமேயாகின்றது. அன்னார் கல்சர் உடையவராயின் பகுத்தறிவைமுன்னிட்டுக் கடவுளின்நிரந்தரமான கருத்தை, இழந்தவைகளின்று மீட்டி எடுத்தேனும், புதிய துறைகளில் [illegible] அளிப்பர். இல்லையேல், இழந்த இ[illegible] பெருந் துன்பமாய் முடியும்.

199158

அப்பர்

அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்.—31. இதிகாசம்

[100-வது பக்கத் தொடர்ச்சி]

5. கந்தன் வரவும் அந்தகாரக் கழிவும்

தென்னிந்தியாவிற்குக் கயிலாயத்திலிருந்து சரவணபவன் வந்ததாலேயே ஆரியநாகரிகம் வடநாட்டிலிருந்து தென்னாட்டுக்கு வந்ததென்று எண்ணலாகாது. கயிலாயபதியைக் குமரிநாட்டில் வழிபட்டது, ஆரியர் இந்தியாவுக்கு வருவதற்கு முன்னரே யாம். இந்திய மகாசமுத்திரத்தினிடையே யிருந்த நாட்டின் தென்பாகத்தைத் தேவர்கள் வசிக்கும் பூமி யென்றும், அங்குச் செல்லலாகாது என்றும் சுக்கிரீவன், தென்திசை தேடச்சென்ற அநுமான்முதலானோருக்குக் கூறுகின்றான். அத் தேவர்கள், அதாவது நாகரிகமமைந்த நல்லொழுக்கத்தார், தாம் வழிபடும் பெருந் தலமாகக் கயிலாயத்தைக்கொண்டிருந்தாரென்பதுதிண்ணம். ஆகையால் முருகக்கடவுள், தன்னடியார்களுக்கு அரக்கர்களால் விளைந்த அளப்பரியதுன்பத்தை நீக்கச் சிவபெருமானிடமிருந்து புறப்பட்டுத் தென்திசை வந்ததாயும், அதற்கு முன்னர், தமிழ்முனிவரான அகத்தியர் திருக்கயிலாயத்திலிருந்து பொதிகைமலைக்குப் போகும்படிக்குக் கட்டளையிடப்பட்டா ரென்றும், வேங்கடமலைக்குத் தெற்கில் பல சிவஸ்தலங்கள் இருந்ததாகவும், அவற்றுள் தில்லை ஒன்றென்றும், அவற்றை முருகக்கடவுள் வழிபாடு செய்தாரெனவும், மண்ணி யாற்றங் கரையிலுள்ள திருச்சேய்ஞலூர், முருகக்கடவுளால் ஏற்படுத்தப்பட்ட குமாரபுரியாகுமென்றும் கந்தபுராணத்தா லுணர்கின்றோம். ஆகையால்நமது நாவலந்தீவு அக்காலத்தில் தமிழரால் குடியேறப்பட்டும், ஆங்காங்குச் சிவபெருமானுக்குக் கோயில்கள் கட்டப்பட்டும், சற்றுத் தமிழர்நாகரிகம் பரவப்பெற்று மிருந்ததென்பது வெளியாகும்.

ஆயினும்நாவலந்தீவானது சுரங்களும் மரமடர்ந்த வனங்களும் நிறைந்து கொடிய மிருகங்களுடன் பற்பல துன்பங்களை விளைவிக்கும் அசுரர்களால் குடியேறப்பட்டும் இருந்தது. இமயமலைக்கருகில் கிரௌஞ்ச பர்வதம்மிகவும்மோசமான இடமாயிருந்ததென்பது நிச்சயம். தமிழ்முனிவரும் அதனால் துன்புற்றவரே. இராக்கதர்கள் இருடிகளைப்போல் வேடங்களைத் தரித்து வழிப்போக்கர்களுக்குத் துன்பம் செய்தவர்சிலரும், உண்மையில் தவவழி நின்று கடுந்தவஞ் செய்து இம்மையில் பெரும்பயன் பெற்றவர்சிலரும் ஆங்காங்கு வனங்களிற் பன்னகசாலை யமைத்து வசித்துவந்தனர். ஆயினும் கிரௌஞ்சம் அழிவதற்கு முன்னர் ஆரியர் இந்தியாவின் இருதயபாகத்தைக் கண்ணெடுத்துப் பார்க்கவும் முயலாதவராகி இருந்தனர் இராமன் இலங்கை வந்ததே முதன்முதலில் ஆரியர்கள் தமிழ்நாட்டிற்கு வந்த காலமாம். இதற்கு முன்னர் நாவலந்தீவுக்குக் கிரௌஞ்சம் எல்லையாயும் அரணாயு மிருந்தது. ஆகையால் அதன் அழிவை ஆரியர்கள் மிகவும் கொண்டாடி ஆநந்தப்பட்டார்களென்பதை வால்மீகி முனிவர் ஆங்காங்குக் கிரௌஞ்சபர்வதத்தின் அழிவிற்கு மகிழ்ந்து ஸ்கந்தனை வியந்து கூறும் உபமான மொழிகளால் நாம் அநுமானிக்கலாம். மற்றும் புகலிவேந்தரும், இதைப் பின்வரும் பாசுரத்தில் ஒருவாறு குறிப்பிடுவதும் காண்க:—

திக்கிற்றே வற்றற்றே திகழ்ந் திலங்கு மண்டலச்
  சீறூர் வீறூர் போராார்தா ரகனுட லவனெதிரே
புக்கிட்டே வெட்டிட்டே புகைந்தெழுந்த சண்டத்தீப்
  போலே பூநீர் தீகான்மீப் புணர்தரு முயிர்கடிறஞ்
சொக்கத்தே நிர்த்தத்தே தொடர்ந்தமங்கை செங்கதத்
  தோடேயாமே மாலோகத் தியர்களை பவனதிடங்
கைக்கப்போர் யுக்கத்தே கனன்று மிண்டு தண்டலைக்
  காடோ யோடா வூரேசேர் கழுமல வளநகரே
சம்பந்தர்-திருத்தாளச் சதி-பண்-வியாழக்குறிஞ்சி. 5.

ஆதலால் சிவபெருமான் "சேந்தனை முன் பயந்து, உலகில் தேவர்கள்தம் பகை கெடுத்தோன்" என்னச் சம்பந்தர் பாடியதில், உலகில் தேவர்களது நடமாட்டத்திற்குப்பகையாயிருந்தவர் அசுரர்எனப்பொருள் தருவதால், நன்னடக்கை சன்மார்க்கம் இவற்றிற்கு இடையூறாய் இருந்தனவற்றை யொழிக்கவேகந்தன் வந்தனனென்பது விளங்கும்.

முருகவேள் தென்னாட்டுக்கு வருங்காலத்து இது முற்றும் நாகரிகமற்ற பூமியாயிருந்ததென்று எண்ணலாகாது. ஒருவகை அசுர நாகரிகம் பரவியிருந்தது. மேல்நாட்டைப்போல் உலகத்தில் பெருஞ்சக்திகளைப் பிரயோகிக்க யந்திரம் முதலிய கருவிகளை அமைப்பதற்கும், போருக்குவேண்டிய பலவிதமான யந்திரங்களை அமைப்பதற்கும், ஆவசியமான இயற்கைச்சூக்குமங்களையும், அதற்குவேண்டிய கல்வி முதலிய கலைகளையும்அவ்வரக்கர்கள்நன்குணர்ந்திருந்தனர். பொன், இரத்தினங்கள்முதலியவற்றால்செய்தஅணிகலன்கள் பூண்டும், பட்டாடைகள் உடுத்தும், கஸ்தூரி முதலிய வாசனைச் சாந்துகள் பூசியும், ஆகாயத்தை அளாவும் உப்பரிகையில் உலாவியு மிருந்தன ரென்னில், பொன் இரத்தினப் பரீட்சையும், அவற்றின் பணிவேலையும், சிற்பம்முதலிய கலைகளையும் பெற்றிருந்தன ரென்பது திண்ணம். இவைமாத்திர மன்று. தேவரனைவரையும் செயித்து, சிலரைச் சிறையிட்டுக் கடலில் மீன்பிடிக்க வைத்தவர்களைச் சாமான்ய நாகரிக மமைந்தவரென்பதற்கு இடமில்லை. முருகக் கடவுளின் சேனாபதிகள் வீரவாகு உள்ளிட்ட யாவரும் தாருகனுக்குத் தோற்றன ரென்னில். தெய்வீக சக்தியும் வாய்ந்தவனென்பதும், அவன் மரித்தவுடன் இறந்த பதிவிரதா சிரோமணியாகியமனைவியுடன் வாழ்ந்தவனென்பதும்கூறப்படுவதால், அவ்வரசன்வழியே குடிகள் பலரும்சென்றிருப்பா ரென்பதற்கு ஐயுற வில்லை.

ஆயினும் இத்தகைய சிறப்பு மிக வாய்ந்த அசுரர்கள்மீது முருகக்கடவுளே படையெடுத்துச் சென்றதற்குக் காரணம்யாதென உற்று நோக்கின் இந்திரனை ஓடச்செய்து அவன்நாட்டைச் சூரபதுமன் கைப்பற்றித் தேவர்களைச் சிறையி லிட்டதேயாம். நமது நாகரிகப்பார்வையால் உற்றுநோக்கின், இது ஒரு பெருங் குற்றமாகக் காணப்படாது. எல்லா அரசர்களும் அக்காலத்திலும்இக்காலத்திலும்செய்யுங்காரியம்இதுவேயாம். அசுரர் வெற்றியடையாமல் தேவர்கள் வெற்றி பெற்றிருப்பின், தேவர்களால் மகேந்திரபுரி அழிவதன்றி, அசுரர்களின் பூரண நாசமும் உண்டாகாதோ? ஆதலால், இம்முகத்தில் குற்றமாய்க் காணப்படாதது

மன்றி, தேவர்களின்பால் நாம் அன்பு காட்டக்கூடுமாதலால், அவர்களைச் சிறையிட்டது சாமான்ய குற்றந்தானெனக் கொள்ளக்கூடியஇச்செய்கைக்கு முருகவேள் படையெடுப்பது அழகோ? அதனினும்கொடிய செய்கைகள் உலகத்தில் நிகழ்கின்றனவே, அவற்றிற்கெல்லாம், முருகவேள் படையெடுக்கலாகாதா வென்னும் சங்கை யெழும். இதன் உண்மையை ஆராய்வோம்—

கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகமென்ற நான்கு யுகங்களிலும், அசுரர்கள் இருந்தார். ஆயினும் இவர்கள் குணங்களில் சிற்சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. இலங்கையில் இராவணன் காலத்திய அரக்கர், சூரபன்மன் காலத்து அரக்கரை விட, துஷ்டராயும் நாகரிகத்தில் குறைவு பட்டவராயும் காணப்படுகின்றார். இராவணனது தம்பியாகிய கும்பகர்ணன் பூனைகள் சுண்டெலிகளைக் கவ்வி விழுங்குவது போல் வானரங்களை யுண்டானென்பதை இராமாயணத்தில் காணலாம். ஆயினும் சூரபன்மனாகிலும், அவன் தம்பிமார் ஆயினும் அவ்விதச் செய்கையில் புகவில்லை. யானைமுகம்பெற்ற தாருகன் மாமிசபட்சணி யென்பதற்கும் போதுமான ஆதாரமில்லை. ஆயினும் வீரமகேந்திரபுரத்து வாசிகள் விலங்குகளைக் கொன்று தின்றாரெனவெளிப்படையில் கூறப்படினும், மற்றுப்பொது நாகரிகத்தை உற்று நோக்கின் வீரமகேந்திரபுரிக்கு,இலங்காபுரி ஒப்பிடத்தக்கதா யில்லை. தேவாரத்தில் சூரபன்மனைக் குறித்துத் தமது பாசுரங்களிற் செப்பு மிடத்து அப்பரும் மற்ற சமய குரவரும் இழித்துக் கூறினாரில்லை. இராவணனைக் குறித்துக் கூறுமிடத்தே எங்கும் இழித்தே கூறினார். திருக்கோழம்பத் திருப்பதிகத்தில் அப்பர் சூரனைக் குறித்துப் பாடிய செய்யுளிற்குப்பின்னர் மறுசெய்யுளில் இராவணனைக் குறித்துப் பாடினார். பின்வரும் அவற்றைக் காண்க:—

சமர சூரபன் மாவைத் தடித்தவேற்
குமரன் தாதைநற் கோழம்ப மேவிய
அமரர் கோவினுக் கன்புடைத் தொண்டர்கள்
அமர லோகம தாளுடை யார்களே.

துட்ட னாகி மலையெடுத் தஃதின்கீழ்
பட்டு வீழ்ந்து படர்ந்துய்யப் போயினான்
கொட்ட நாறிய கோழம்பத் தீசனென்
றிட்ட கீத மிசைத்த வரக்கனே.

—திருக்கோழம்பம் - திருக்குறுந்தொகை. 10, 11.

திருஞானசம்பந்தரும் சூரபன்மனுக்குக் கடூரமான அடைமொழிகள் கொடுக்கவில்லை-ஒரே யிடத்தில்தானவனை "மாயச் சூர்" என்றார் - மாயைக்குப் பிறந்தவனை மாயச்சூர் என்பது ஒரு இழிவுமன்று. சூரனை அவ்வாறு கூறும் அவர்பதிகத்தில் இராவணன் எவ்வாறுபேசப்படுகின்றனனென்பதைப்பின்வருஞ்செய்யுட்களாற் காணலாம்:—

காயச் செவ்வி காமற் காய்ந்து கங்கையைப்
பாயப் படர்புன் சடையிற் பதித்த பரமேட்டி
மாயச் சூரன் றறுத்த மைந்தன் தாதைதன்
மீயச் சூரே தொழுது வினையை வீட்டுமே.

—சம்பந்தர் - திருமீயச்சூர் - பண் - காந்தாரம். 1.

புலியின் உரிதோ லாடை பூசும் பொடிநீற்றர்
ஒலிகொள் புனலோர் சடைமேற்கரந்தார் உமையஞ்ச
வலிய திரள்தோள் வன்கண்ணரக்கர் கோன் றன்னை
மெலிய வரைக்கீ ழடர்த்தார் மீயச் சூரரே

—ஷை - 8,

ஆகையால் சூரபன்மன்,கடவுளே படையெடுத்துத் தண்டிக்கவேண்டிய அத்துணைத் துஷ்டனாகக் காணப்படவில்லை. அவன் தேசஆட்சி மிகவும்செழிப்பாகவிருந்ததென்பதற்கு வீரமகேந்திரத்தில் வீரவாகு கண்ட காட்சியே சாட்சியாகும். அவ்வூர் நீர் வளத்தால் மல்கியதன்று. பஃறுளியாறு இயற்கை நதியன்று, செயற்கையால் உண்டானது என்பதற்கு அத்தாட்சியாய்க் கந்தபுராணத்திலும், சூரபன்மனது இராஜதானிநகரவாசிகளுக்கு எல்லாப் பொருள்களுமிருந்தும் குளிப்பதற்குச் சமுத்திரநீரேயாக * குடிப்பதற்கே நல்ல சலம் கிடைத்ததுஎன்றும் கூறப்படுகின்றது. சூரபன்மனை † கொடுங்கோன் மன்னனென்று கச்சியப்பசிவாசாரியார் மொழிந்தது, தேவர்களைச் சிறையில்இட்டானென்ற அவசரத்திலேயே யல்லாமல், அவன் தனது நகரவாசிகளுக்குத் துன்பம் தந்தான் என்னும் கொள்கையாலன்று. அவன் மகேந்திரபுரி வாசிகளுக்குக் கொடுங்கோன் மன்னனெனத் தோன்றியிருக்குமாயின், அத்துணை ஜனக்கூட்டம் அவ்வூரி லிராது.

* கங்கை யூண்பய னாகவுந் தூயதெண் கடனீர்
அங்கண் மாநகர்ப் பரிசன மாடவும் அணைந்து
துங்க மேனிலை மாளிகை யாவணஞ் சோலை
யெங்கும் வாவியும் பொய்கையும் பிறவுமா யீண்டும்
—மகேந்திர காண்டம் - நகர்புகு படலம் - 56.

† புறத்திரு ளிரிய வைகும்
பொலஞ்சுடர்ப் பொன்செய் வேரந்
திறத்தியல் கோயின் முன்னஞ்
சேர்ந்தது தன்னை வீரன்
பறித்தொரு கரத்தி னேந்திப்
பதகனுஞ் சூர பன்ம
னறத்திய லிழக்கி வைகு
மவைக்களம் வீசி யார்த்தான்.
—மகேந்திர காண்டம் - நகரழி படலம் - 2.

தமிழ்ப்பாடம் 108.

வில்லிபாரதம்—உத்தியோக பருவம்.

[102-வது பக்கத் தொடர்ச்சி]

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

உரிமையுடன் றம்பியரன் றுணர்வறியா
மையினவைக்க ணுரைத்த மாற்றம்
பரிபவமோ கேட்டோர்க்குப் பரிபவமென்
பதுபிறராற் பட்டா லன்றோ
கருதிலது மற்றெவர்க்கு மொவ்வாதோ
கண்மலரிற் கைப டாதோ
பொருதொழிலுங் கடைநிலத்திற் கிடந்ததே
யெனமொழிந்தான் புகழே பூண்பான். 15

துரியோதனனது செய்கையைக் குற்றமே யெனக் கொண்டு தண்டித்த லாகாதென்று தருமன் மொழிகின்றான்.

பதவுரை.

தம்பியர் - நமது தம்பியர்களாகிய துரியோதனாதி

யர், உரிமையுடன் - அந்தச் சுதந்தரத்தினாலும், உணர்வு அறியாமையின் - நல்ல அறிவு இல்லாததாலும், அன்று - அக்காலத்தில், அவைக்கண் - இராஜசபையில், உரைத்த - சொன்ன, மாற்றம் - வார்த்தைகள், கேட்டோர்க்கு-அதனைக் கேட்டவர்களாகிய நமக்கு, பரிபவமோ - அவமானமுண்டாக்குமோ!

பரிபவம் என்பது-அவமானம் என்பது, பிறரால்- அந்நியர்களால், பட்டால் அன்றோ - உண்டானால் அன்றோ!

கருதில் - யோசிக்குமிடத்து, அது - (பிறரால் பட்டால் மாத்திரந்தான் அவமானம் உண்டாகும் என்னும்) அது, மற்று எவர்க்கும் - வேறு யாரிடத்திற் சொன்னாலும், ஒவ்வாதோ - அவர்களுக்குச் சம்மதமாகாதோ!

கண்மலரில் - மலர்போன்ற நமது கண்களில், கை - நமது கைவிரல், படாதோ - படுவதில்லையோ, (அதனால் கையை வெட்டிவிடுகின்றோமோ!) பொருதொழிலும் - போர் செய்கின்றதென்னும் காரியமும், கடைநிலத்தில் - கொல்லையில், கிடந்ததே - போட்டுக் கிடப்பதற்குச் சமானமான தொன்றே!

என - என்று, புகழே பூண்பான் - புகழையே தன் ஆபரணமாக உடைய தருமன், மொழிந்தான் - கூறினான்.

விரிவுரை:—தருமராசனது குணநலப் பெருமையின் அருமை மிகவும் ஆச்சரியமானது. துரியோதனன் நாடு கொடாததற்குக் காரணம் மறதியேயன்றி வேறன்று எனக் கருதித் தமது நினைவை அவனுக்கு முன் உரைக்கச்சொன்ன தன்மைக்கிணங்க, துரியோதனன் அன்று இராசசபையில் துரோபதையின் துகிலை உரிந்ததும் கொழுந்தியென்ற உறவின் உரிமையால் செய்ததாகவே தருமன் வீமனுக்கு எடுத்துக் காட்டுகின்றான். "தம்பி, வீம, அயலாளொருத்தியைத் துரியோதனன் அவ்வாறு செய்தனனோ, பார்; இல்லையே. ஆதலால் இதனை அவன் செய்தது உரிமையால் என்று உணர்" என இயம்பி, உரிமையைக் காட்டுவதற்கேற்ற முறை துகிலைக் களைவதுதான் ஆகுமோ என்ற சந்தேகத்திற்கு, "தெரியாத்தனத்தால் இவ்வகையில் உரிமை கொண்டாடினார்" எனச் சமாதானம் கூறினான். "உரிமையிற் செய்தாலென்ன, பகையிற் செய்தாலென்ன; தெரிந்து செய்தாலென்ன, தெரியாமற் செய்தாலென்ன; நமக்கு இதனால் விளைந்த அவமானத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டாவோ" என வீமன்கேட்கலாம் என்று உத்தேசித்து, பிறரால் பட்டால் அல்லது அவமானமில்லை என்பதை எடுத்துக்காட்டி, தான் மாத்திரமேயன்றி, எவருமே இதனை ஒப்புக்கொள்வார்களென்று விளக்குகின்றான். "அப்படி யாரும்ஒவ்வார், அவர் செய்த அவமானம் அவமானமே என்பாயாயின், அதற்காக அவர்களைத் தண்டிப்பது தகுதியோ? உடலின் ஒரு உறுப்பு மற்றொரு உறுப்பிற்குத் தீங்கு செய்துவிட்டதென்று துண்டித்துவிட்டால், அதனால் நஷ்டம் அதிகமே யன்றிக் குறைவில்லையே," என்று தொடர்ந்து, "எது எவ்வாறாயினும் சண்டை செய்வதனினும் இழிவான காரியம் வேறொன்றில்லை, அது கொல்லைப்புறக் குப்பையில் போடத் தகுந்ததே" என முடிக்கின்றான் தருமன்.

முன் சூதுபோர்ச் சருக்கத்தில் திருதராட்டிரன், "உத்தமமாங் குலமயிலே என்சிறுவர் அறியாமல் உனக்குநேரே மைத்துனராம் முறையால் இவ்வழக்கு அலாதன செய்தார் மதியிலாமல்..." என்று துரோபதையிடம் வேண்டிக்கொண்டதை முற்றிலும் நம்பிய தருமன், இங்கு "உரிமையுடன் உணர்வறியாமையால்" அவ்வாறு செய்தனர் என்கின்றான்.

"புகழே பூண்பான்" என்று தருமனை இங்குக் குறித்ததன் கருத்து நோக்கத் தகுந்தது. போரினால் புகழ் செய்வார் மன்னர்குல வீரர் என்று எண்ணுவதிலும், பொறையின் பெருமையால் எய்தும் புகழே உயர்ந்ததென்பது கவியின் துணிவு.

சூடுகின்ற துழாய்முடியோன் சுரருடனே
முனிவர்களுஞ் சுருதி நான்குந்
தேடுகின்ற பதஞ்சிவப்பத் திருநாடு
பெறத்தூது செல்ல வேண்டா
வாடுகின்ற மடப்பாவை தன்வரமு
மென்வரமும் வழுவா வண்ணங்
கோடுகின்ற மொழியவன்பா லெனைத்தூது
விடுகவினிக் கொற்ற வேந்தே 16.

தருமராசனது நியாயங்களை ஒப்புக்கொண்டவன் போல் பீமன் போலிவார்த்தைகள் பேசித் தன்னையே தூதுவிடச் சொல்கின்றான்.

பதவுரை.

சூடுகின்ற - அணிவதற்கு உரிய, துழாய் - துளசியைத் தரித்த, முடியோன் - முடியை உடையவனாகிய கிருஷ்ணன், சுரர் உடனே - தேவர்களும், முனிவர்களும் - இருடிகளும், சுருதி நான்கும் - நான்கு வேதங்களும், தேடுகின்ற - தேடிக்கொண்டிருப்பினும் இன்னும் கண்டுகொள்ளப்படாத, பதம்-அவனுடைய பாதங்கள், சிவப்ப - நடந்து சிவக்கும்படி, திருநாடு- அழகிய நாட்டினை, பெற - நாம் பெறும்வண்ணம், தூது செல்ல வேண்டா - தூதனாகப் போக வேண்டா—(நமக்காகக் கிருஷ்ணனைத் தூது ஏவுவது அழகன்று; ஆகையால்)

கொற்ற வேந்தே - வெற்றி பொருந்திய அரசனே, வாடுகின்ற - சோர்வடைகின்ற, மடப்பாவைதன்-இளமைபொருந்திய பதுமைபோன்ற திரௌபதியின், வரமும் - சபதமும், என் வரமும் - என்னுடைய சபதமும், வழுவா வண்ணம்-தவறாதபடி, எனை-என்னை, இனி - இனிமேலாகிலும், கோடுகின்ற - மாறுகின்ற, மொழியவன்பால்-வார்த்தையையுடைய துரியோதனனிடத்தில், தூது விடுக - தூதனாக அனுப்பக்கடவாய்—(என்றனன் வீமன்)

விரிவுரை:—"சுரருடனே முனிவர்களும் சுருதி நான்குந் தேடுகின்ற பதம்" என்று கண்ணபிரானது பாதங்களைப் புகழ்ந்துகூறுவதன் கருத்தினை,முன் நளவெண்பா, " மூலப் பழமறைக்கு முன்னையுங் காணலாம்" என்ற செய்யுளையொட்டி (வால்யூம் 6, பக்கம் 3) விளக்கியிருக்கின்றோம். அடியார்க் கெளியனாய்த் தான் வந்து அருளினல்லது, புண்ணியம்தவம்அறிவு முதலிய சாதனங்களைக்கொண்டு அவன் பாதங்களை அடைவத னருமை இங்குக் கூறப்பட்டிருக்கின்றது.

இத்தகையதோர் பரம்பொருள், கால்கள் வருந்தத் தமக்காகத் தூதுசெல்வது தகுதியன்று எனக் கூறுமளவும் வீமன் வஞ்சனையின்றியே பேசுவதுபோல் தோன்றினும், கிருஷ்ணனுக்குப் பதிலாய்த் தன்னைத் தூது அனுப்பும்படி வேண்டிக்கொள்வதில் அவனது

நோக்கம் வெளிப்படுகின்றது. "கிருஷ்ணன் சென்று சந்துசெய்துவிடுவானாயின் எங்கள் சபதங்கள் பாழாகும்; ஆகையால் என்னையே அனுப்புதல் வேண்டும். அனுப்புவாயாயின், அவ்விடத்தில் நானொருவனாகவே துரியோதனன் முதலாயினோரைக் கொன்று எம் சபதத்தை முடித்துவைக்கின்றேன். அல்லது சந்தொன்றும்நேராமல் தூதுபேசிப் பின் போரிற்கு வழிசெய்து வருகின்றேன்" என்ற எண்ணத்தில் பேசுகின்றான் வீமன்.

மலைகண்ட தெனவென்கைம் மறத்தண்டின்
வலிகண்டு மகவான் மைந்தன்
சிலைகண்டு மிருவர்பொருந் திறல்கண்டு
மெமக்காகத் திருமா னின்ற
நிலைகண்டு மிவள்விரித்த குழல்கண்டு
மிமைப்பொழுதி னேரார் தம்மைக்
கொலைகண்டு மகிழாம லவன்குடைக்கீ
ழுயிர்வாழக் குறிக்கின் றாயே. 17

குறைவற்ற திறலுடைய தாங்களும் தமக்குஉதவத் திருமாலும் இருக்குங்கால், அத் துரியோதனனுக்கு அஞ்சிச் சந்துசெய்யவேண்டுவது ஏனென்று வீமன் வெகுள்கின்றான்.

பதவுரை.

மலைகண்டது என-மலைக்கு நிகரான, என்-எனது, கை - கையிலுள்ள, மறம் - போருக்குரிய, தண்டின் - கதையினது, வலி - வலிமையை, கண்டும் - பார்த்திருந்தும், மகவான் - இந்திரனது, மைந்தன் - புத்திரனாகிய அர்ச்சுனனது, சிலை - காண்டீபம் என்னும் வில்லினது திறமையை, கண்டும் - பார்த்திருந்தும்; இருவர் - நகுலனும் சகாதேவனும் ஆகிய மற்ற இருவரும், பொரும் - போர்செய்யும், திறல் - வல்லமையை, கண்டும் - கண்டிருந்தும், எமக்கு ஆக - நமக்காக, நெடுமால் - திருமாலாகிய கிருஷ்ணனே, நின்ற - உதவி செய்ய நிற்கின்ற, நிலை - உறுதி நிலையை, கண்டும் - பார்த்திருந்தும்; இவள் - இந்தத் திரௌபதி, விரித்த - (பழிவாங்கமாட்டீர்களோ என்று) விரித்திருக்கின்ற, குழல்-கூந்தலை, கண்டும் - கண்களால் பார்த்திருந்தும்,

நேரார் தம்மை - நமது பகைவர்களை, இமைப்பொழுதில் - கண்மூடித் திறப்பதற்குமுன், கொலை கண்டு - நாம் கொல்லக் கண்டு, மகிழாமல் - மகிழ்வதற்குப்பதிலாய், அவன் - அந்தத் துரியோதனனது, குடைக்கீழ் - ஆட்சிக்குக் கீழ்ப்பட்டு, உயிர் வாழ - (அவன் கொடுக்கும் ஐந்து ஊரையும் வீட்டையும் பெற்று) வாழ்நாள் கழிக்க, குறிக்கின்றாயே - ஏன் நினைக்கின்றாயோ! (தெரியவில்லையே, என்றனன் வீமன்).

குறிப்பு:—கண்டு, என்ற சொல் ஒரே பொருளில் பன்முறை இச்செய்யுளில் வருவது, சொற்பொருட் பின்வரு நிலையணி ஆம்.

கை + மறம் = கைம்மறம், என மகரம் மிகுந்து புணர்ந்தது. நிலைமொழி ஐ என்னும் உயிரேனும், அல்லது அந்த உயிரோடு கூடிய உயிர்மெய்யெழுத்தேனும் ஓரெழுத்தொருமொழியா யிருக்க, வருமொழிமுதலில் ஞ ம ந, என்ற மெல்லின மெய்களில் ஒன்று வருமாயின், அம்மெய் மிகுந்து புணரும் என்று முன் 7-வது வால்யூம், 71-வது பக்கம்)காட்டிய விதிக்கு இணங்க, கை + மறம் = கைம்மறம் என்றாயிற்று.

இலக்கணம்.

III. D. புணரிலக்கணம் கற்பதற்கு எளியதாகும்படி நிலைமொழியின்ஈற்றையும் வருமொழிமுதலையும் நோக்கி நாம் பிரித்துக்கொண்ட வகைகளில், நிலைமொழியிறுதியில் உயிர்வர வருமொழியின்முதலில் வல்லினமெய் வருகின்ற புணர்ச்சிக்கு உரிய விதிகளை இனி, கற்கத்தொடங்கலாம். இவை, கரடி + குட்டி = கரடிக்குட்டி என அவ்வல்லினமெய் சிலபோது மிகுந்தும், கரடி + கடித்தது = கரடி கடித்தது எனச் சிலபோது மிகாமலும் புணரும். எப்பொழுது மிகும், எப்பொழுது மிகாது என்பதை, நிலைமொழியும் வருமொழியும் என்ன பொருளில் தொடர்கின்றன என்ற தொடரிலக்கணத்தைக் கொண்டே தெரிந்துகொள்ளவேண்டும். தொடர் மாத்திரம் அல்லாமல், நிலைமொழியின் தன்மையும், அதன் ஈற்றிலிருக்கும் உயிரும், சிற்சிலபோது, வருமொழிமுதலில் இருக்கும் வல்லினமெய் மிகுவதற்கும் மிகாததற்கும் காரணமாயிருக்கும். ஆதலின், நாம் இதுவரையிலும் ஓதியிருக்கின்ற சொல்லிலக்கணம் தொடரிலக்கணம் முதலியவைகளை நமது வாசகர்கள் இப்பொழுது பின்னுமோர்முறை படித்து நன்கு தேர்ந்துகொள்ள வேண்டுமென்று விழைகின்றோம்.

ஷேக்ஸ்ப்பியர் நாடகக் காட்சித் திரட்டு

[108-வது பக்கத் தொடர்ச்சி]

ஜான் அரசர்

அங்கம் IV காட்சி I.

இடம்—அரண்மனையில் ஓர் அறை.

ஹூபர்ட்டும் கொலைஞரும் வருதல்

ஹூ:—இவ் விருப்புச் சலாகைகளைப் பழுக்கக் காய்ச்சுமின். அந்தத் திரைக்குள்ளே மறைந்திருமின். நிலத்தின் அகலிடத்தில் நான் காலா லுதைக்கும்போது, ஓடிவந்து, என்னுடன் காணப்படும் சிறுவனை நாற்காலியிற் சேர்த்துக் கட்டுமின். எச்சரிக்கையாய் இருமின்; இவ்விடம் விட்டு நீங்கிக் காவலிருமின்.

முதற்கொலை:—உன்னிடமிருக்கும் ஆஞ்ஞைப்பத்திரம் இச்செய்கைக்கு இடந்தருமென்று நம்புகின்றேன்.

ஹூ:—ஒழுங்கில்லாச் சந்தேகங்கள்! நீ அஞ்சவேண்டா. நான்சொன்னதைச் செய். (கொலைஞர் மறைதல்) இளைஞ! வெளிவா! நான் உன்னிடம் பேசவேண்டும்.

ஆர்தர் வருகிறான்

ஆர்:—நமஸ்காரம், ஹூபர்ட்.

ஹூ:—நமஸ்காரம் சிறு அரசே! [1].

ஆர்:—பேரரசனாயிருக்க உரிமையிருந்தும் மிகச் சிறிய

---

(1) ஆங்கிலத்தில் Little princeஎன்பதற்குஇளவரசே எனக் கொள்ளவேண்டும். ஆயினும் Little என்பதற்குச் சிறிய என்று பொருளாதலால் அவ்வார்த்தையை ஆர்தர் எடுத்துத் தன் மறுமொழியில்தான் மிகச்சிறிய, அதாவது எண்ணிக்கைக்கு உதவாத அரசன் என்கிறான்.

அரசனாய்த்தானிருக்கின்றேன். என்ன முகம்வாடியுள்ளாய்?

ஹூ:—ஆம்! நான் மகிழ்ச்சியாயிருந்த நாளுமுண்டு[1]

ஆர்:—ஐயோ, தெய்வமே! என்னை யொழிய வேறெவரும் வருத்தமா யிருக்கக்கூடாதென எனக்குத் தோன்றுகிறது. ஆயினும் நான் பிரெஞ்சு நாட்டில் இருந்தபோது உயர்குலத்து வாலிபர்களெல்லாம், வேண்டுமென்றே [2] இரவேபோன்று துன்பம் சூழ்ந்த தோற்றம்பூண்டவர்களா யிருக்கக் கண்டுள்ளேன். எனது கிறிஸ்தவமதத்தின் மீதாணை! நான் சிறையிலின்றி, வெளியேயிருந்து ஆடு மேய்த்துக்கொண்டிருப்பின், நாளின்நாழிகை எவ்வளவுநீண்டிருக்குமோ அவ்வளவும் மகிழ்ச்சியோ டிருப்பேன். எனது சிற்றப்பன் இன்னும் எனக்குத் தீங்கிழைக்கச் சூழ்ச்சிசெய்கிறாரென்றுநான் ஐயம் எய்தேனாயின், இந்த இடத்திலேயே களிப்போடிருப்பேன். அவர் எனக்கஞ்சுகின்றார்; நான் அவருக்கஞ்சுகின்றேன். நான் ஜெப்ரியின் பிள்ளையாயிருப்பது என்னுடைய பிழையோ? இல்லை; இல்லை; உண்மையா யில்லை. கடவுள் என்னை உன்பிள்ளையாய்ப் படைத்திருக்கலாகாதா? அப்போது ஹூபர்ட் நீ என்னிடம் அன்பா யிருப்பாய்.

ஹூ:—(தனக்குள்) நான் இவனிடம் பேசப் புகுந்தால், தனது குற்றமற்றக் குதலை மொழிகளால், எனது மனத்தில், இப்போதில்லாமல் இறந்து கிடக்கும் கருணையை உயிர்த்தெழுப்பி விடுவான். ஆகையால் நான் விரைந்து காரியத்தை முடிக்க வேண்டும்.

ஆர்தர்:—ஹூபர்ட் உனக்கு உடம்பு அசௌக்கியமோ? உன் முகம் வெளுத்தாற்போற் காணப்படுகின்றதே. உண்மையிலே நீ சற்றே அசௌக்கியமாய் இருக்க விரும்புகின்றேன். ஏனெனில் அப்போது, நான் இரவெல்லாம் உன் அருகில் உட்கார்ந்து உன்னைப் பாதுகாப்பேன். நீ என்னை நேசிப்பதைவிட நான் உன்னைப் பெரிதும் நேசிக்கின்றேன் என்று உறுதி கூறுவேன்.

ஹூ.—(தனக்குள்) அவனது மொழிகள் என்னுள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றன. (வெளிப்படையாய்) இளைஞ! இதை வாசித்துப் பார் (ஓர் காகிதத்தைத் தருகிறான்) (தனக்குள்) ஈதென்ன, அறிவீனக் கண்ணீரே! கருணையில்லாக் கொடுமையை வாயிலுக்குப் புறத்தே துரத்துகின்றாய். [3] நான் சுருங்கச் சொல்லி முடிக்கவேண்டும். இல்லையேல், துணிவென்பது, கண்ணின்வழியாய்ப் பெண்ணொருத்தியின் இரக்கமுள்ள அழுகைத் துளிகளாய் வெளிச்சென்றுவிடும். (வெளிப்படையாய்) அதை வாசிக்க முடியவில்லையோ? அழகாய் எழுதப்படவில்லையோ?

ஆர்:—அதிற்காணும் முறையற்ற காரியத்தை நோக்க அழகாகவே எழுதப்பட் டிருக்கின்றது [1]. எனது இரண்டு கண்களையும் இருப்புச் சலாகைகளால் நீ சுட்டவிக்க வேண்டிய தவசியமோ? [2]

ஹூ.—இளங் குமர! அவசியந்தான்.

ஆர்.—நீ இதைச் செய்வாயா?

ஹூ.—நான் செய்வேன்.

ஆர்:—இதைச்செய்ய உனக்கும் மனந்துணிந்ததோ? உனது தலை சற்றே நொந்தபோது, எனது கைக்குட்டையை உன் நெற்றியிற் சுற்றினேன். அது என்னிடம் இருந்த கைகுட்டைகளில் உயர்ந்தது; ஓர் அரசகுமாரத்தியால் வனையப்பட்டது. அதை மீண்டும் உன்னிடமிருந்து கேட்கவில்லையே. மேலும், நடுநிசியில் என் கையைக்கொண்டு உன் தலையைப் பிடித்து, ஓர் மணிநேரத்தைக் காக்கின்ற விநாடியென [3], நிமிடத்திற் கொருமுறை, காலங் கழிக்கமாட்டாது துயருற்றஉன்னை "என்னவேண்டும்? எங்கே நோயுளது? நான் என்னனைக் காட்டச் செய்யக்கூடிய தேதாகிலும் உண்டோ?" என்று இன்ன பல மொழிகளால் உன்னைத் தேற்றவில்லையோ? ஏழை மக்களுக்குப் பிறந்த பிள்ளையொருவனும் உன்னிடம் ஒரு அன்பு மொழியும் பேசாமல் வாளா படுத்திருந்திருப்பான். ஆயினும் நோயுற்ற உனக்குப் பணிவிடைசெய்ய நீ ஓர் அரசகுமாரனை அடைந்தாய். நான் உன்பால் காட்டிய அன்பு கபடமானதென நீ எண்ணி அதை வஞ்சகத்தன்மை யுடையதெனச் சொல்லலாம்; மனமுளதேல் அங்ஙனமே கூறுக. நீ என்னை முறைகடந்து நடத்த வேண்டுமென ஈசன் திருவுள்ள முளதேல், ஏன், நீ அங்ஙனமே நடத்தி யாக வேண்டியதே. என் கண்களைப் பிடுங்கவோ போகின்றாய்? இக்கண்கள் ஒருபோதும் உன்னை உறுத்தும் பார்த்ததில்லையே.

ஹூ:—அதைச் செய்ய ஆணையிட்டுள்ளேன். ஆகையால் காய்ந்த இருப்பினால் நின்கண்களைத் தீய்ப்பிக்க வேண்டியவனாய் இருக்கின்றேன்.

ஆர்தர்:—இக்கலிகாலத்திலன்றி வேறெங்கும் எவரும்

---

(1) இப்போது இல்லையாயினும் ஒருகாலத்தில் அதிக மகிழ்ச்சியா யிருந்திருக்கிறேன்.

(2) இயற்கையாயன்றிச் செயற்கையில்; அல்லது ஒரு மாறுபட்ட கொள்கையோடு.

(3) இது ஆங்கிலத்தின் நேர் மொழிபெயர்ப்பு. கொடுமையை வெளியே துரத்துகின்றாய் என அமையும். கருணையில்லாக் கொடுமை என்னுள்ளத்தில் இப்போது நிலைத்து நிற்க வேண்டியது அவசியமாயிருக்க, அதைத் துரத்த நீ கிளம்புவதென்? கண்ணீர் உதிப்பதால் கருணையைக் கண்ணினிடமிருந்து அது வெளிப்படுத்துகிற தென்கிற பொருளும் துவனிக்கும்.

(1) ஆங்கில மொழிகள் fair and foul என்பன. இவை முறையே அழகையும் அழகின்மையையும் தெரிவிக்கும்; foul என்பதற்கு அசுசியான, வெறுக்கத்தக்க, நியாயமற்ற என்னும் வேறு பல பொருள்களும் உண்டு. ஷேக்ஸ்பியர் இவ்விரண்டு மொழிகளைச் சொல்முரண் மொழிகளாயும், பின்னதைச் சிலேடையாயும் உபயோகித்துள்ளார்.

ஓர் பழய நாடகத்தில் இவ்வாணை கொண்ட அரசனது ஓலை விரிவாய் எழுதப்பட்டிருக்கிறதாம். இதையே ஷேக்ஸ்பியரும் பின்பற்றலானார். ஆர்தர் பேசுவதிலிருந்து ஹூபர்ட்டிடம் குற்றமில்லையென்றும், அரச ஆணையை அவன் நிறைவேற்றக் கடமைப்பட்டவன் எனவும் அவன் அறிந்தேபேசுவதாய்க் காணப்படுவதை நோக்குக.

(2) கண்ணிலான் அரசாள உரிமையற்றவன் என்பது ஜெர்மானியர் முதலிய ஆரியர் கொள்கை. நமது நாட்டிலும் திருதராஷ்டிரன் அரசாள உரிமை யற்றவன் என்றதும் அவன் பிறவிக்குருடனானபடியினால் தான்.

(3) விநாடிகள் அதிக எச்சரிக்கையாய் இருந்து மணிக் கணக்கைக் காப்பதுபோல்நானும் அவ்வளவுஎச்சரிக்கையாய் இருந்து நிமிஷத்திற் கொருமுறை உன்னைக் காத்தேன்.

199158

இதைச்செய்யார்[1]. சிவக்கக் காய்ச்சின இரும்பும், இக்கண்களின் அருகே நெருங்கும்போது குற்றமற்ற என் நிலையைக் காட்டும் எனது கண்ணீரைப் பருகித் தானாகவே தனது தீச்சினத்தை[2] அடக்கிக் கொள்ளும். அம்மட்டோ! அதன்பின் என்கண்ணைக் கெடுக்க நெருப்புக்கொண்டதற்காக அவ்விரும்பு மனம்நொந்து துருக்கொண்டழியும். அடித்து உறுதி செய்யப்பட்ட இரும்பைவிட வன்னெஞ்சங் கொண்டவனோ நீ? ஓர் தேவதூதன் என்னிடம் வந்து ஹூபர்ட் உன் கண்களைக் கெடுப்பான் என்று சொல்லினும் நான் அவனை நம்பியிரேன். ஹூபர்ட்டினது உரையைத் தவிர வேறொருவர் வார்த்தையை ஈதொன்றில் நம்பமாட்டேன்.

ஹூ:—(தரைமீது உதைத்து) வெளியே வாருங்கள். (கொலைஞர் கயிறு, இரும்பு முதலியன கொண்டு முன் வருதல்) நான் சொன்னபடி செய்யுங்கள்.

ஆர்தர்:—ஓ என்னைக் காப்பாய்! ஹூபர்ட் என்னைக் காப்பாய்! இக்கொடியோர்தம் குரூரப் பார்வையாலேயே எனது கண்கள் வெளிவந்து விடுகின்றனவே!

(1) இரும்பினால் தீயவைப்பேன் என்பதற்கு உத்தரமாக இவ் விரும்புயுகத்தில் என்று ஆங்கிலத்தில் பாடம். இருப்பு யுகம் என்பது ஆங்கில மொழியில் கலியுகம்.
(2) தீச்சினம் - கொடுஞ்சினம்; தீயாகிய சினம்.

மதுரைக் கோவை

[111-வது பக்கத் தொடர்ச்சி]

VI. முன்னுற வுணர்தல்.

தோழி தலைவியை வாட்டம் வினாதல்

கனையா வரிவண் டறைகொன்றை யார்பொற்
கடம்பவனத்
தெனையாளு மீச ரியல்வரை வாய்நில
வின்றமணிப்
புனையா வரிப்பந்தும் பொன்னூச லும்புரிந்
தாடிமற்றோர்
சுனையாடி யோதிரு வேதிரு மேனி
துவண்டதுவே. 105.

முன்னுறவுணர்தல் முற்றும்.

VII. நாண நாட்டம்.

பிறைதொழு கென்றல்

கூனார் பிறைச்சொக்கர் வண்டமிழ்ச் சாரற்
குவிந்தகொண்ட
றானா யிருண்ட சரிகுழ லாயன்று
தாய்முகம்பார்த்
தானா தழுது விளையாட நீநின்
றழைத்தகன்று
மானா கிலுந்தரு மேவணங் காயிந்த
வான்பிறையே. 106.

வேறுபடுத்திக் கூறல்

செவ்விக் கமல வெயருமைக் காவிச்
சிவப்புமிந்தக்
கொவ்வைக் கனியில் வெளுப்புமல் லாலியற்
கூடல்வந்த
நவ்விக் கரத்தர் திருவால வாயின்று
நானகன்ற
பவ்வத் திருவென்ன லாமணங் கேநின்
படிவத்தையே. 107.

வேறுப[ா]டென்னெனக் கூறல்

பருவஞ் சிறிது முலையரும் பான பருவமிரு
புருவங் கடந்து [1]குழைமறி யாவிழி பூணலருக்
கருவந் தருபா னால வாயினி லன்னமின்று
னுருவந் திரிந்து பலவித மான துரையெமக்கே. 108.

(பிரதி.) 1. குழையறிவாவிழி.

நெறிப்படு நாட்டத்து நிகழ்ந்[த]து மறைத்தல்

சூடும் பிறைமதி யாகநின் றாடிய சொக்கரியல்
கூடும் பொதிய மலையிடை யேகுழற் பந்திமட்டு
நீடுங் கயற்கணல் லாய்தமி யேனின்னை நீங்கியங்ங
னாடுஞ் சுனைதந்த திந்தமெய் பூணு மவசங்களே. 109.

சுனைவியந்துரைத்தல்

அலைந்து சரிந்த குழலுமைக் காவி
யயர்வுஞ்சற்றே
கலைந்து நெகிழ்ந்த துகிலுகந் தாலும்விற்
காமனங்கந்
தொலைந்தரு வஞ்செய்கண் ணார்சொக்கர் மால்வரைத்
தொண்டைநிறங்
குலைந்து வருந்திய மூந்தரு மோநின்
கொழுஞ்சுனையே.

நாண நாடல் முற்றும்.

VIII. நடுங்க நாட்டம்.

கோடுங் குடருங் குருதியு மாயலை குங்குமநீ
ராடுங் கடமலை யொன்றுகண் டேனய லேயிருவர்
தேடுங் கடவுள் திருவால வாய்தனிற் சென்றுவஞ்சி
சூடுஞ் சுடரிலை வேல்துரந் தானொரு தோன்றலுண்டே

நடுங்கநாட்டம் முற்றும்.

IX. சேட்படை.

தலைவன் முகம்புகுதல்

நறைக்கா வணமல ரோதிநல் லீருமை
நாளுமொரு
குறைக்கா விரந்து வருந்தல்கண் டாற்சொக்கர்
கூடல்மண
வறைக்காகு மீதிது முன்றிலுக் காமென்
றமைத்தசிற்றி
லிறைக்கா வணநிழல் நில்லெங்கி லீர்புரிந்
தின்னமுமே. 112.

தழைக்கையுறை காட்டல்

மழையுங் கொடியு மிகல்மது ரேசர்
வரையில்வண்டும்
உழையும் பிணங்குந் தடங்கணல் லீர்நெஞ்
சுருகிநின்று

குழையுந் தமியனைப் போற்சந்த னாடவி
கொய்துவந்த
தழையும் பிழைசெய்த தோவிது காலஞ்
சருகெழவே. 113.

தழைதகா தென்றல்

மாந்தழை மேனி யுமைபாகர் சொக்கர்
[2]மதுரையன்னாட்
காந்தழை யீதென் றறிந்திலை யேயிள
காரவண்ட
லேந்திழை யார முலையார் வடிவுக்
கிணங்குவதிப்
பூந்தழை யோவண்ண லேவெளி தோவண்டர்
பொற்றழையே. 114.

முத்தக் கையுறை காட்டல்

மாகந் திறையிட்ட வெண்பிறை யாளர்
மதுரையிலென்
னாகந் திறையிட் டடிமைநிற் பேனள
காடவிக்கு
மேகந் திறையிட்ட முத்தன்று காணுமிவ்
வெண்முத்தமென்
மோகந் திறையிட்ட தாலணி வீரு[ம்]
முகிண்முலைக்கே. 115.

முத்தக் கையுறை மறுத்தல்

மைத்தா மரைக்கண் ணுமைபாகர் சொக்கர்
மதுரையினுன்
கைத்தா மரைமுத்த மாரறி வார்நறை
கான்றமலர்க்
கொத்தா ரளக முகிண்முலை யார்பொற்
குமுதநல்கு
முத்தாரங் கண்டிலை யோவடல் வாகை
முடிமன்னனே. 116.

(பிரதி.) 2. மதுரையன்னாற்.

மாணிக்கக் கையுறை காட்டல்

இழைக்காய் வளரு மிளமுலைக் காம்வளை
யேந்துபசுங்
கழைக்கா மலதுங்கள் மேகலைக் காம்வெயில்
கான்றமணிக்
குழைக்கா டரவணி வார்சொக்க நாயகர்
கூடல்வெற்பில்
மழைக்கா ரளகநல் லீர்குழைக் காமிந்த
மாணிக்கமே. 117.

மாணிக்கக் கையுறை யேலாதென மறுத்தல்

குலவிக் குறுநகை யாடுமப் போது கொழிக்குமந்த
நிலவிற் கிளவெயி லொக்கும தோவுமை நேமிமுலை
கலவிக் கினிய கடம்பா டவிக்கறைக் கண்டர்வெற்பா
நலவித் தகனல்லை யோமணி யோவணி நல்குவதே. 118.

காவியம்போது கையுறை காட்டல்

அக்கு வளைக்குந் தொடையால வாயரன்
றூடல்மதன்
இக்கு வளைக்க வெரிவளைப் பார்வரை
யின்றசுனை
மைக்குவ ளைக்கண் மடந்தைநல் லீருங்கள்
வார்குழற்கென்
கைக்குவ ளைக்கொழும் போதணி யீர்கண்
[3]களிப்பதற்கே. 119.

இல்லை யென்று மறுத்தல்

இக்காலை தோறுங் கொழும்பா கொழுகி
யிருகரையுஞ்
செய்க்கால் பெருகுந் திருவால வாயர்
சிலம்பில்வல்லி
மைக்காவி யன்றித் தொடைக்காவி யந்திரு
மார்பமற்றோர்
கைக்காவி யென்பது கண்டறி யோமொரு
காலத்துமே. 120.

(பிரதி.) 3. கழிப்பதற்கே.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

6-ம் பத்து, 4-ம் தசகம்

[90-வது பக்கத் தொடர்ச்சி]

5-ம் பாசுரம்.

வேண்டித்தேவரிரக்கவந்து
பிறந்ததும்வீங்கிருள்வாய்
பூண்டன்றன்னைபுலம்பப்போ
யங்கோராய்க்குலம்புக்கதுங்
காண்டலின்றிவளர்ந்துகஞ்சனைத்
துஞ்சவஞ்சஞ்செய்தது
மீண்டுநானலற்றப்பெற்றே
னெனக்கென்னவிகலுளதே.

அவதாரிகை:-இப்பாசுரத்தில், ஸ்ரீ கிருஷ்ண பகவானது ஜநநத்தின் அதிசய சம்பவங்களைப் பேசி அநுபவிக்கின்றார்.

உரை:—வேண்டித் தேவர் இரக்க - க்ஷீராப்தியில் பிரம்மாவும் தேவர்களெல்லாவரும் இவ்வுலகத்தில் அநீதி மேலிட்டு இருப்பதையும் கம்ஸன் சிசுபாலன் தந்தவக்கரன் பவுண்டரீக வஸுதேவன் துரியோதனாதிகள் முதலான துஷ்டராஜாக்கள் உலகத்தைத் துன்புறுத்திக் கொடுங்கோல்நடத்துவதும், இராக்ஷதர்கள் ஸாதுஜநங்களைப் பீடிப்பதையும் க்ஷீராப்தி நாதனான பகவான் மஹாவிஷ்ணுவுக்குத் தெரிவித்து, "தேவரீர் துஷ்டநிக்ரஹம் சிஷ்டபரிபாலனம் செய்யப் பூமியில் அவதரிக்க வேண்டும்" என்று பிரார்த்திக்க அதற்கிணங்கிவந்து, ஸ்ரீகிருஷ்ணனாகச் சங்கு சக்கராயுதத்துடன் அவதாரம் செய்ததும், வீங்கு-கிருஷ்ணபக்ஷம் அஷ்டமி யானதால் நிமிஷத்திற்கு நிமிஷம் வளருகின்ற, இருள்வாய்-இருட்டு மூட்டத்தில், போய் - தான் பிறந்த காராக்கிரஹத்திலிருந்து புறப்பட்டு நந்தகோபராகிய இடைய ராஜா வசிக்கும் இடத்திற்கு யமுனா நதியைக் கடந்து, கம்ஸனாகின்ற குரூர அசுர சுபாவமுள்ள மாமன் அறியாதபடி போய், அன்று அன்னை-அப்பொழுதுதான் தன்னைப்பெற்ற தேவகி சிசுபிறந்தவுடன் கம்ஸன் வந்துவிட்டானோ என்ற பயத்தினால், புலம்ப - மாத்ரு வாத்ஸல்யத்தால் அழ, ஆய்க்குலம் புக்கதும் - நந்தகோபன் வீட்டுக்குப் போன

தும், காண்டலின்றி வளர்ந்ததும் - கம்ஸனும் அவனைச் சேர்ந்துள்ள ஏனையவர்களும் கண்டுகொள்ள முடியாதபடி வளர்ந்ததும், கஞ்சனைத் துஞ்ச வஞ்சம் செய்ததும் - கம்ஸன், மாய்ந்து போம்படி வஞ்சனை செய்ததும், ஈண்டு - இப்போது வெகுகாலம் கடந்த இந்நாளில் நான் பிரிதி மிகுதியாலே, அலற்றப்பெற்றேன் - மீண்டும்மீண்டும் அதிகரிக்கின்ற ஆச்சரியத்தோடு அநுஸந்தித்துச் சொல்லப்பெற்றேன். எனக்கு என்ன இகல் உளது-பகவானை அநுபவித்தற்குஎன்ன விரோதம் உண்டாகும். வஸுதேவர் அர்த்தராத்திரியில் யமுனை நதியை, ஆதிசேஷனின் படங்களின் ஒளியாலும் பெய்த மழையைத்தடுக்க உதவிய குடையாலும் ஸாவதானமாய்க் கொண்டுபோய்விட்டபிறகு பகவானுக்குத் தாய்போல் ஏதுகேடு வருமோவென்கின்ற சங்கை தீர்ந்து திவ்யஜநநத்தின் ஸம்பவத்தையெல்லாம் அநுபவிக்கின்ற எனக்கு அவ்வநுபவத்திற்கு யாதும் விரோதமில்லை. சங்கு சக்கிராயுதம் இன்னவைகளைப் பகவான் கம்ஸனறியாவண்ணம் வஸுதேவரின் வேண்டுகோளின் நிமித்தம் கைவிட்டதால் ஆழ்வாரின் ஸுரஸ அநுபவத்துக்கு ஏற்படக் கூடிய மற்றொரு விரோதமும் நீங்கிவிட்டதென் றறிக.

குறிப்பு:—ஸ்ரீமத் பாகவதத்திற் காட்டிலும் அதிகமாக ஹரிவம்சத்தில் ஸ்ரீ கிருஷ்ணனைப் அவதரிக்கத் தேவர்கள் "வேண்டி இரக்கக்" காணலாம்.

6-ம் பாசுரம்

இகல்கொள்புள்ளைப்பிளந்ததும்
இமிலேறுகள்செற்றதுவும்
உயர்கொள்சோலைக்குருந்
தொசித்ததுமுட்படமற்றும்பல
அகல்கொள்வையமளந்த
மாயனென்னப்பன்றன்மாயங்களே
பகலிராப்பரவப்பெற்றே
னெனக்கென்னமனப்பரிப்பே.

பதக்குறிப்புக்கள்:—இகல் - விரோதம், கொள் - கொண்ட, பகாசுரன் முதலானவர்களுக்கும் கம்ஸன் ஏவியதனால் விரோதம் ஏறியதென்று திருவுள்ளம். இமில் - காளைகளின் கழுத்து முசுப்பு, பரிப்பு-துக்கம், குருந்து - ஓர் விருக்ஷவகை, இதனில், ஓர் அசுரன் கம்ஸன்ஏவலால் உள்புகுந்து கண்ணனை மாய்க்க எத்தனித்தான்.

பொழிப்புரை:—மாமனாகியகொடூரமுடைய கம்ஸனால் ஏவப்பட்ட பகபக்ஷி, குருந்தமரம், எருதுகள் இன்னவைகளை மாயும்படி செய்த ஸமக்ஷமங்களும், உலக முழுவதையும் அளந்துகொண்ட ஆச்சரியங்களும் எனக்கு அநுபவத்தில் தைக்க அவைகளை என் புத்திக்குக் காட்டிக்கொடுத்த என் மஹாப் பிரபுவின் குணங்களையும்சேஷ்டிதங்களையும் நான் அநுபவிக்கப் பெற்றேன்'. இப்படிக்கு ஒருவருக்கும் எவ்வண்ணமும் வாய்க்காத இலாபங்களை அடைந்து எனக்கு மனோரதம் பூர்ணமாயிற்று, என்கிறார்.

7-ம் பாசுரம்

மனப்பரிப்போடழுக்குமானிட
சாதியிற்றான்பிறந்து
தனக்குவேண்டுருக்கொண்டுதான்தன
சிற்றத்தினைமுடிக்கும்
புனத்துழாய்முடிமாலைமார்பனென்
னப்பன்றன்மாயங்களே
நினைக்குநெஞ்சுடையேனெனக்
கினியார்நிகர்நீணிலத்தே

உரை:—மனப்பரிப்பு - பரிப்பு - வியஸநம், இங்கு மனதிற்குத் தாபம், ஏனென்றால் தன் பக்தர்களுக்குக் கொடுங்கோல் மன்னர்களால் ஏற்படுகின்ற நலிவை தான் ஸஹிக்க மாட்டாமையாலே. இது பகவானின் கருணையால் ஏற்படுகிறபடி. அழுக்கு மானிடசாதியிற் பிறந்து-அநேக குறைவுகளும் தோஷங்களும் கூடிய மனுஷ ஜாதியில் அவர்களைக் காப்பற்றுதலின் நிமித்தம் அவர்கள் உருவாகவே ஏகரஸமாய் அவரோடு கலந்து அவர்களுக்கு வேண்டிய ரக்ஷையைச் செய்யத் தான் அவதரித்து, தனக்கு வேண்டுஉருக்கொண்டு-அவசியம்போல் தன் உருவை மாறுதல் செய்துகொண்டு, இங்கு ஸ்ரீகிருஷ்ண பகவான் முசுகுந்தனுக்குத் தபசுக்கீடாக ஸேவை ஸாதித்து மோக்கம் அளித்தபோது சதுர்புஜங்களோடு தோன்றியதும், முன்பே தாம் சங்குசக்கரமுள்ள இரண்டு புஜங்களை உபஸம்ஹாரம்செய்திருந்ததை மாற்றிவிட்டு அதுமுதல் நாலு புஜங்களோடு அவதார முழுவதும் சென்றதையும் உத்தேசித்து ஆழ்வார் அருளிச்செய்கிறபடி—(மனுஷ உருவானாலும் பகவானின் திருமேனி சுத்த ஸத்துவ மயமென்றும் பிருகிருதி விடுபட்ட தேஜோமயமென்று மறியதக்கது.) தன்சிற்றத்தினை முடித்ததும்-துஷ்டநிக்ரஹம் ஆரம்பித்துத் தனக்குப் பக்த துரோஹிகளான அஸுர பிரகிருதிகளைக்காய்ந்துமுடித்துச் சீதளமான துளசிமாலைகளைத் தன்மார்பில் தம் பக்தர்களின் அநிஷ்டங்களை முடித்ததற் கடையாளமாய் அணிந்த பகவானை இதுபோன்ற பல ஆச்சரியங்களை லோகோபகரமாக இயற்றியதையும் எல்லாக் காலமும் நினைத்து ஆறுதலடையும் நெஞ்சையுடைய வெனக்கு ஒப்பானவர்கள், இந்த லோகத்தில் இப்பேர்ப்பட்ட பாக்கியப் பிரஸாதம் பெற்றவர்கள் இல்லாததினாலே, ஒருவருமில்லை.

குறிப்பு:— முன்னரே, வைகுண்டவாஸிகளும் தனக்கு நிகரில்லையென்றார் அல்லவா? அப்படி இருக்க இவ்வுலகத்தில் இல்லை யென்று சொல்லவேண்டுமோவென்றால், வைகுண்டவாஸிகள் ஆயாஸமின்றியே பகவானின் குணாதிசயங்களையும் ஸௌந்தரியத்தையும் கைமுதல் ஒன்றுமில்லாமல் அநுபவிக்கிறார்கள். இவ்வுலகிலுள்ள ஸத்துக்களான பக்தர்கள் தம்அழுக்குடம்பு துஷ்டஜநநலிவு இவ்வாறுள்ள பல பீடைகளின் நடுவில் சிற்றின்பப் பாழ்குழியில் விழாமல் ஏகாந்தி சித்தராய் மேல்கண்ட பகவானின் திவ்விய சரித்திரத்தையும் சேஷ்டிதங்களையும் மனமாறப் புசிக்கிறவர்களானதால் வைகுண்டவாஸிகளைவிடச் சிரேஷ்டரென்று ஆழ்வார் திருவுள்ளம் போலும். இவ்வண்ணம் உள்ள அதிசய பக்தர்களையும்விடத் தாம் அதீதரென்று அருள்செய்கிறதாக ஏற்படுகிறது.

கம்பராமாயணம்:—பதவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு, முதலியவைகளுடன் ஸ்ரீ. வை. மு. சடகோபராமாநுஜாசாரியார், சே. கிருஷ்ணமாசாரியார், வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியாரவர்களால் பதிப்பிக்கப்பெற்றவை. பால காண்டம் ரூ. 5. அயோத்தியா காண்டம் ரூ. 5. ஆரணிய காண்டம் ரூ. 4. கிஷ்கிந்தா காண்டம் ரூ. 4-8-0. சுந்தர காண்டம் ரூ. 5. யுத்த காண்டம் 2-பாகம் ரூ. 10. தபால் செலவு வேறு.
கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை.

ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை.

[110-வது பக்கத் தொடர்ச்சி]

II. திருப்பதி ஸ்ரீநிவாஸமூர்த்தி ஸ்தோத்திரங்கள்.

1. ராகம்—கௌளிபந்து.] [தாளம்—ஆதி

பல்லவி

தெர தியகராதா நாலோநி—திருப்பதி வேங்கடரமண மத்ஸரமனு................(தெர)

அநுபல்லவி

பரமபுருஷ தர்மார்த்த மோக்ஷமுல—பாரதோலுசுந்நதி நாலோநி...............(தெர)

சரணங்கள்

1. மச்சமு யாகலிகொனி காலமுசே—மக்நமைந ரீதி யுந்நதி
அச்சமைந தீப ஸந்நிதி மறு—கட்டபடி செரசிநட்டுந்நதி............................(தெர)
2. இரவொந்தக புஜியிம்சு ஸமயமுன—யீக தகுலு ரீதி யுந்நதி
ஹரி த்யானமு ஸேயுவேள சித்தமு—அந்த்யஜுவாடகு போயிநட்டுந்நதி.........(தெர)
3. வாகுரமனி தெலியக ம்ருக கணமுலு—வச்சி தகுலுரீதி யுந்நதி
வேகமே நீ மதமு நனுஸரிஞ்சிதி—த்யாகராஜநுத மத மத்ஸர மனு...............(தெர)

பொருள்

திருப்பதி வேங்கடரமண - திருப்பதியில் கோயில் கொண்டருளும்வேங்கடரமணப் பெருமானே! நாலோநி- என் அகத்தினுள் இருக்கின்ற, மத்ஸரமு அநு தெர - மாற்சரியம் என்னும் திரையை, தியகராதா - போக்கக் கூடாதா ?

பரம புருஷ-முழுமுதற் கடவுளே! (அத்திரையானது), தர்ம அர்த்த மோக்ஷமுல - அறம், பொருள், வீடு என்னும் புருஷார்த்தங்களை, பார தோலுசுந்நதி - தூரத்திலே துரத்துகின்றது. (ஆதலால்) [நாலோநி தெரதியகராதா - என்னுள்ளே யிருக்கும் திரையை விலக்கக் கூடாதா?]

மச்சமு ஆகலிகொநி-மீனானது பசியின் மிகுதியினாலே, காலமுசே மக்நமைந ரீதி - தூண்டில் முள்ளினால் அழிவுற்ற விதமாக, உந்நதி - (என் நிலைமை) உள்ளது; அச்சமைந தீப ஸந்நிதிநி - களங்கமின்றிப் பிரகாசிக்கின்ற தீபத்தின் வெளிச்சத்தை, மறுகட்டபடி - ஒரு மறைவானது இடையிட்டு, செரசிநட்டு உந்நதி - பரவவொட்டாமல் கெடுத்துவிட்டது போல (என் ஞானத்தை மாற்சரியமாகிய திரை மூடுவதானது) இருக்கின்றது.

இரவொந்தக புஜியிம்சு ஸமயமுன - நன்றாக உணவையுட்கொள்ளும் ஸமயத்தில், ஈக தகலு ரீதி உந்நதி - தொண்டையிலே ஈ புகுந்தது போல (என் மாற்சரியம் செய்யும் தடையானது) இருக்கின்றது. ஹரி த்யானமு ஸேயுவேள - விஷ்ணுவைக் குறித்துத் தியானம் செய்யும் வேளையில், சித்தமு - மனமானது, அந்த்யஜுவாடகு - புலைச்சேரிக்கு, போயினட்டு உந்நதி - போனதுபோல (என் மனநிலை யிருக்கின்றது.)

ம்ருக கணமுலு - மிருகக் கூட்டங்கள், வாகுரமு அநி தெலியக - (வலைகளை) வலைகள் என்று தெரிந்துகொள்ளாமல், வச்சி தகுலுரீதி உந்நதி - வந்து அகப்பட்டுக் கொள்வதுபோல் (என் மனம் மாற்சரியத்தில் சிக்கிக் கொண்டு) இருக்கின்றது. த்யாகராஜநுத - தியாகராஜனால் கொண்டாடப்பட்ட ஸ்ரீநிவாஸா! வேகமே நீ மதமுந அநுஸரிம்சிதி - விரைவாக உன் அபிப்பிராயத்தை அனுஸரித்தேன்; மதம் மத்ஸரமு அநு தெர-மதம் மாற்சரியம் என்னும் திரையை, தீயக ராநா - விலக்கக் கூடாதா ?

குறிப்பு:—தர்மார்த்த மோக்ஷமுலு என்று கூறியுள்ள இடத்தில் ஸ்வாமிகள் காமத்தைப்பற்றிக் கூறுதிருப்பது நோக்கற்பாலது.

கௌளிபந்து ராகலக்ஷணம்.

இந்த ராகம் 72 மேளகர்த்தா முறையின்படி 15 வது கர்த்தா ராகமான மாயாமாளவ கௌளத்தி ஜன்யம். ஔடவ ஸம்பூர்ண ராகம். ஆரோஹணத்தில் காந்தாரமும் தைவதமும் வர்ஜ்யம். இந்த ராகத்தில் சுத்த மத்யமும் காகலீ நிஷாதமும் ராகச்சாயா ஸ்வரங்கள். இதை எப்போதும் பாடலாம்.

ஆரோஹணம்:—ஸரிமபநிஸ்.
அவரோஹணம்:—ஸ்நிதபமகரிஸ.

ஸ்வர ஸாஹித்யம்.

ஸம்ஜ்ஞா விவரணம்

, — இது ஒரு களையைக் காட்டுகிறது.
; — இது இரண்டு களைகளைக் காட்டுகிறது.
| — இது தாளத்தின் மத்தியிலுள்ள தட்டுக்களைக் குறிப்பிடுகிறது.
|| — இது தாள ஆவர்த்த முடிவைக் காட்டுகிறது.
* — இது பாட்டுத் தொடங்கு மிடத்தைக் குறிப்பிடுகிறது.

ஸரிகம— பாட்டின் நடை எந்தக்காலத்தில் உள்ளதோ அதன் நடுவில் துரிதகால ஸங்கதி வருமிடங்களில் இவ்வாறு கீழ்க்கோடிடப்பட்டிருக்கும்.
ஸரிகம— மேற்படி ஸம்ஜ்ஞையிற் கூறப்பட்டிருக்கும் துரிதகாலத்துக்கும் துரிதமான காலத்தை இந்த இரட்டைக் கீழ்க்கோடு குறிக்கும்.
பதநி—தடித்த எழுத்தில் உள்ள ஸ்வரங்கள் கீழ் ஸ்தாயியைக் குறிப்பிடும்.
ஸ்ரீக்ம—மேலே புள்ளியுள்ள ஸ்வரங்கள் மேல் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

[குறிப்பு:—இந்தக் கீர்த்தனத்தை மத்யம காலத்திற் பாடவேண்டும்]

பல்லவி

; *	நிபநி ; —ஸாரீ —ரிஸநி	ஸா ; ; — ஸா	ஸா ரீ — ரிஸநி	||
; *	தெரதிய்; —யக —ரா. .	தா ; ; — நா	லோ. — நி . .	||
; *	நிபநி ; —ஸாரீ —ரிஸநி	ஸா ; ; — பா	ப தபமகரி — கரி	||
; *	தெரதிய்; —யக —ரா. .	தா ; ; — நா	லோ. . . . . — நி . .	||

ஸ நி *	ஸ ஸ —பாமா—பா நீ ஸ்ா ரீ	ஸ்ரிஸ் நி— பநிபம	ப தபமகரி — கரி ‖
. . *	திரு —ப்பதி—வேங். கட	ர . ம .—ண . ம .	த்ஸ . ர . ம - — நு . ‖
ஸ நி *			
. . *	(தொதிய்யக)		

அநுபல்லவி

; *	பமாப —ஸ்ா ஸ்ா ஸ்ா ; ஸ்ா	ஸ்ா ; ஸ்ா — ஸ்ா	; ஸ்ா — ஸ்ரிக்ரி ‖
; *	பரம —புருஷ— ; தர்	மா ; ர்த்த— மோ	; க்ஷ — மு . . . ‖
ஸ்நி *	ரீஸ்ா —ஸ்நிதாதா— பா மா	பா தா பா ;	ப தபமகரி — கரி ‖
ல . *	பார -தோ . . லு — சங் .	ந தி நா ;	லோ . . . . . — நி . ‖
ஸ நி *			
. . *	(தொதிய்யக)		

சரணம்

; *	பா, ப —பாபா — பா தா பா	பா நீ — பா பா	ப த ப ம —கரி கரி ‖
; *	வா, கு —ர ம — ணி தெ லி	ய க — ம்ருக	க . ண . —மு . லு . ‖
ஸா *	நிபநீ —ஸாஸாஸா-- ரீ கா	ரீ ; ; — ஸரி	கரி —ரிஸஸா ; ‖
. *	வச்சி —த கு லு — ரீ . .	தி ; ; — யுங் .	ந . — . . தி ; ‖
; *	ஸ்நிதாபா —நீ ஸ்ா ஸ்ா ஸ்ா	ஸ்ா ஸ்ா ரீ ஸ்ா	ஸ்ரிக்ரி — ரிஸ்ஸா ‖
; *	வே. க மே —நீ ம த மு	ந நு ஸ ரிம்	சி . . . — தி . . . ‖
; *	ஸ்ாஸ்ா ஸ்ா—நீ தா — பாமா	பா தா பா ;	பதபம கரி — கரி ‖
; *	த்யா க ரா— ஜ . — நு த	மத மத் ;	ஸ. ர . ம — நு . ‖
ஸ நி *			
. . *	(தொதிய்யக)		

பழமுதிர் சோலை

தருமமேன் சாலுந் தமிழ்

சேரமான் தகடூர் எறிந்த பெருஞ் சேரல் இளம் பொறையைக் காண்பான் ஒரு புலவன் மோசுகீரன் என்பான் வந்த அமயம் மன்னவுன் மனைக்கண் இல்லாமையால் அவன் வருமளவும், கண்ணயர்ந்து களைப் பாறுங் கருத்தினனாய், கொற்றவன்றன் வெற்றிமுரசிற் கமைத்திருந்த கட்டிலின்கண் ஏறி, பிறாதனைத் தீண்டவு மாகாதென்னும் மரபு அறியாமல் துயில் போயினன். வந்திதனைக் கண்ணுற்ற வேந்தன், படைமுறையும் தன் கொற்றமும் பழுதுற்றதென வெகுண்டு கூரியவாளினால் அப்புலவனை இருகூறு ஆக்கினனோ வென்னின்—அது செய்திலன். மற்று, புலவன் துயிலுணர்ந் தெழுமளவும் புரவலன் கவரிகொண்டு வீசி நின்றான்.

இளம் பொறை இதுவாயின், மற்றோர் முதுபொறைதான் எவ்வா றமையுமோ யாரறிவார்! ஆற்றல்சால் வேந்த னிவன் அளப்பரிய பொறைகண்டு நண்பர்காள் இறும்பூ தெய்துவீராயின், துயிலுணர்ந்த புலவன், புரவலன் தன்செயல்கண்டுஇயன் மொழிந்த நீர்மையை இனிது கேண்மின்—

மென்பூஞ் சேக்கை
யறியா தேறிய வென்னைத் தெறுவர
இருபாற் படுக்குநின் வாள்வா யொழித்ததை
அதூஉஞ் சாலுநற் றமிழ்முழு தறிதல்
அதனொடு மமையா தணுக வந்துநின்
மதனுடை முழவுத்தோ ளோச்சித் தண்ணென
வீசி யோயே வியலிடங் கமழ
இவணிசை யுடையோர்க் கல்ல தவண
துயர்நிலை யுலகத் துறைய ளின்மை
விளங்கக் கேட்ட மாறுகொல
வலம்படு குரிசினீ யீங்கிது செயலே.

—புறநானூறு. 50.

[வீர முரசை நீராட்டிக்கொண்டு வருவதன் முன்னே அதற்கென்று அமைத்திருந்த, மெல்லியபூக்களையுடைய கட்டிலின் கண்ணே, இதனை முரசுகட்டில் என்று அறியாமல் ஏறிக்கிடந்த என்னைக் கோபங்கொண்டு இரண்டு துண்டாக்கும் நின் வாளின் கூர்மையை விலக்கிய அதுவும், நீ நல்ல தமிழ்முழுதும் அறிந்திருக்குந் தன்மைக்குச் சாலப்பொருந்தும். கோபங்கொள்ளாமை மாத்திரமன்றி, என் அருகு வந்து நின் வலிமையுடைய முழவுபோன்ற தோள்களை நிமிர்த்திச் சாமரத்தால் குளிர வீசினாய். அகன்ற இவ்வுலகடங்கலும் கமழ்கின்ற புகழ் உடையோர்க்கு அல்லது, மேலே உயர்ந்திருக்கின்ற உலகத்தில் இடம் பெறுதல் இல்லை என்னும் வாய்மையைத் தெரியக்கேட்டிருப்பதாலோ, வெற்றிபொருந்திய தலைவா, இங்கு இச் சாமரையை வீசுகின்றனை? காரணம் எதுவென்று சொல்]

தமிழின் திறமறிந்த புலவன் இறைவனது பொறை கண்டு வியந்தனனல்லன். நற்றமிழ் முழுதறிந்த அவ் வரசற்கு அதூஉஞ் சாலு மென்னு மமைதியே கண்டனன். தமிழ்முழு தறிந்தபின் வெகுள்வாரோ சிலர். ஆயினும், வாள்வாய் ஒழித்ததை யன்றியும், சாமரையெடுத்து வீசிய பரிசு யாதோவென்னும் ஐயமே ஒருவா றநம்புலவனை உழக்கியது. நற்றமிழ்முழுதறிந்தோர்க்குஇதுவுஞ் சாலுமோ, அல்லது அயலொருஊதியத் திற்கவாவிய நோக்கமோஎன்னவே மோசுகீரன் முன்னிநினைக்கின்றான். "முழுதும் தமிழறிந்துஇருத்தலால் சுரந்த அன்புகொண்டு, செய்தனையோ இது, அல்லாக்கால் விண்ணுலகில் இடம்பெற இயற்றியவோர் கருமமேயோ" என்று கேட்குமளவில், இப்பின்னதற்குத் தமிழ் போதாதென்று கருதித் தருமம் என வேறு ஒன்றினைச் செய்ய உன்னினனோ மன்னவன் எனச் சிறிது மாழ்குகின்றதுபோலும் இப்புலவன் உள்ளம்.

"மோசுகீர, ஒன்றுகேள். பிறருஞ் சான்றோர் சென்ற நெறியெனச்செல்லும் மன்னவன் தன் செய்கையின் நோக்கத்தைத் தானே ஓர்ந்தவனல்லன். வாளைமறித்த தமிழே அவன்கையில் ஒருதண்ணென்கவரியுந்தந்தது கண்டாய். அன்றியும், பொறுப்பதற்குத் தமிழ் போதியதாயின் ஊதியத்திற்கவன் வேறொன்றுசெய்யான்; செய்தாலு மதுவுந் தமிழ்தந்ததருமமே"—என நண்பர்காள் முரசுகட்டி லறியாதேறி உறங்கிய இப்புலவனுக்கு அறிவுறுத்துவோம்.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தாகாண்டம்—2. அநுமப் படலம்

[105-வது பக்கத் தொடர்ச்சி]

பின்னர்க் காணும் பெற்றிய தன்றே.

அன்பினுக் கவதியின்றி என்பு நெக்குருக, வருவோர் தோற்றத்திற்கும் தன் மெய்ப்பாட்டிற்கும் அடைவென்கொல் என்ன அறிதல்தேற்றா அநுமன் நின்றனன்.

இவ்வழி யெண்ணி யாண்டவ்
    விருவரு மெய்த லோடுஞ்
செவ்வழி யுள்ளத் தானும்
    தெரிவுற வெதிர்சென் றெய்திக்
கவ்வையின் றாக நுங்கள்
    வரவெனக் கருணை யானும்
எவ்வழி நீங்கி யோய்நீ
    யாரென வினவ லுற்றான்.

[அப்போது அவ்விருவரும் வந்தஅளவில், அவ்வாறு எண்ணினவனாய்ச் செம்மையே நினைக்கின்ற உள்ளத்தையுடைய அவ்வனுமன், தன்னைக் காணும்படி அவர்களுக்கு எதிரிற்சென்று சேர்ந்து, "உங்கள் வரவு துன்பமில்லாத நல்வரவாகுக" என்று (ஸ்வாகதம்) கூறுதலும், கருணையின் நிலயம் போன்றவனாகிய இராமனும், "நீ எவ்விடத்திலிருந்து வருகின்றாய், யாவன்" என விவை, அனுமன் விடை சொல்லத்தொடங்கினான்.]

இராமன் கேட்ட கேள்வி முற்றிலும் நேர்முகமானது. ஊரும் பேரும் யாதென வினவினானன்றி, அநுமன் நல்வரவுகூறி உபசரித்ததற்கு எதிர்வினயம் இயம்ப வேண்டுமென்னும் முறைமையும் நினைத்திலன்; எனினும் அநுமன் இக்கேள்விகளுக்கு விடை கூறிய பின்னரே அன்னவன்றன் மேன்மையைச் சொற்கடந்தசிறப்போடும் பலபடவியக்கநேர்வதைக் காணலாம். எனின், தான் கொண்டிருந்த அம்மாணியின் உருவத்தாலன்றி, விண்டுரைத்த மொழிகளாற்றான் இராமனது நன்மதிப்பை மாருதி பெற்றான் என்னவே எண்ணல் வேண்டும். இராமன் திருமாலாயின் தெரியாததொன்றில்லை; தயரதன் புதல்வனே யாயினும் அவனால் தெரிந்துகொள்ள இயலாததும் இல்லை. ஆதலின், தன்னை வஞ்சித்தறிய வந்ததோர் வேடம் இது எனக்கண்டமையால், ஊரும் பேரும் உரைக்குமாறு பணித்ததன்றிவேறொன்றும் அநுமனை உசாவ மனங் கொண்டிலன்போலும். அவ்வழி வந்த அவ்வீரர்பால் தனக்கு நம்பிக்கை இல்லாமையால் அவர்தமை வஞ்சிக்கவேண்டி யோர் சன்னியாசியின் வேடங்கொண்டு அநுமன் சென்றான் என்று வான்மீக முனிவர் கூறியிருக்கின்ற காரணம் கம்பர் நூலில் காணப்படவில்லையாயினும், ஒற்றனுக்கு உரிய முறைமையில் அநுமன் புறப்பட்டுவந்தன னாதலின், அம்மரபிற்கேற்க வோர் வேடம் இங்கும் வேண்டியிருந்தது. மரபு அதுவாயினும், வந்த வீரர்தம் தோற்றத்தால் பகையின்மை தெளிந்த மாருதியின் மனம், ஒற்றாடற் கெதிர் உறவாடவே புக்கது. எனினும் தான்கூர்ந்தஉறவிற்கு எதிருறவு காட்டாமை இராமனிற் கண்டனன். வேடத்தை யறிந்துகொண்டதால் நேர்ந்ததோ இதுவென அயிர்த்தான். அயிர்த்து, இனி நேருறப் பேசுதலே நன்மையா மென வுன்னி,

மஞ்சனத் திரண்ட கோல
    மேனிய மகளிர்க் கெல்லாம்
நஞ்செனத் தகைய வாகி
    நளிரிரும் பனிக்குத் தேம்பாக்
கஞ்சமொத் தலர்ந்த செய்ய
    கண்ணயான் காற்றின் வேந்தற்
கஞ்சனை வயிற்றின் வந்தே
    னாமமு மனும னென்றான்.

[மேகம் போன்ற திரண்ட அழகிய மேனியையுடையவனே, மாதர்க்கெல்லாம் விஷம் என்னத்தகுந்த தன்மை உடையதாய், குளிர்க்கமிக்க பனிக்கு வாடாத செந்தாமரைபோன்று மலர்ந்த சிவந்த கண்களையுடையவனே, நான் வாயுபகவானுக்கு அஞ்சனாதேவியின் வயிற்றில் பிறந்தவன்; என் பெயரும் அநுமன் என்றான்]

இம்மலை யிருந்து வாழு
    மெரிகதிர்ப் பரிதிச் செல்வன்
செம்மலுக் கேவல் செய்வேன்
    தேவநும் வரவு நோக்கி
விம்மலுற் றனைய னேவ
    வினவிய வந்தே னென்றான்
எம்மலைக் குலமுந் தாழ
    விசைசுமந் தெழுந்த தோளான்.

[என்று மீண்டும், சிறந்த மலைகள் எல்லாம் தாழும்படி கீர்த்தியைத்தாங்கி வளர்ந்திருக்கின்ற தோள்களையுடைய அவ்வனுமன், "இந்த மலையில் இருந்து வாழ்கின்ற, எரிகின்ற கிரணங்களையுடைய சூரியபகவானது புதல்வனாகிய சுக்கிரீவனுக்கு ஏவல் செய்கின்ற நான், தேவனே, அந்தச் சுக்கிரீவன் உங்கள் வருகையைப் பார்த்துக் கலக்கங்கொண்டு, என்னை ஏவியபடியால், உங்களை விசாரித்து அறியும்பொருட்டு, வந்தேன்—என்றான்]

அனுமன் இயம்பியதெல்லாம் அவ்வளவே. "வாயுவின் மைந்தன், அஞ்சனைக்குப் பிறந்தவன். அநுமன் என்பெயர். சுக்கிரீவனுக்கு ஏவல் செய்கின்றேன். அவன் கட்டளையின்படி உன்னை வினவி யறிய வந்துளேன்" என்ன உண்மையை உரைத்ததல்லால், உறுபொருள் செறிந்தவோர் சொற்றிறம் யாதும் இவ்வாசகத்தில் விளங்கவில்லை யாயினும்,

மாற்றமஃ துரைத்த லோடும்
    வரிசிலைக் குரிசின் மைந்தன்
தேற்றமுற் றிவனி னூங்குச்
    செவ்வியோ ரின்மை தேறி
ஆற்றலு நிறைவுங் கல்வி
    யமைதியு மறிவு மென்னும்
வேற்றுமை யிவனோ டில்லை
    யாமென விளம்ப லுற்றான்.

[அனுமான் அவ்வார்த்தையைச் சொன்னவுடன், கட்டமைந்த வில்லையுடைய அரச குமாரன், சற்றே ஆராய்ச்சி செய்து, இவனைவிட உயர்ந்த செம்மைவாய்ந்தவர் எங்கும் இல்லாமையைத் தெளிந்து, ஆற்றலும் நிறைந்தகுணமும் கல்வியின் நலன்கள் அமைந்திருப்பதும் அறிவும்என்னப் படுவன இவனே யன்றி இவனைத் தவிர வேறாக ஒன்றும் இல்லையென்று மதித்தான் என்னத் தன் தம்பி[illegible]சொல்லத் தொடங்கினான்.]

m211, N21KN
199158

புகழிற்கும் வியப்பிற்கும் இனியோர் எல்லை இல்லை யென்னும்படி இராமன் அனுமன்றன் தன்மையைத் தம்பிக்குப்புகழ்ந்தெடுத்துரைக்கின்றான். அச்சொற்களுக்கு இலக்காயிருப்பவன் செவிப்படாமல் ஒருபுறமாக இவை பேசப்பெற்றன போலும். கூறுவான் இராமன்—

இல்லாத வுலகத் தெங்கு
 மீங்கிவ னிசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக்
 கடலுமே யென்னுங் காட்சி
சொல்லாலே தோன்றிற் றன்றே
 யார்கொலிச் சொல்லின் செல்வன்
வில்லார்தோ ளிளைய வீர
 விரிஞ்சனோ விடைவ லானோ.

[வில்பொருந்திய தோளையுடைய இளைய வீரனே, இவனது கீர்த்தி மிகுந்து வளரும்படி, இவன் கற்காத கலைகளும் கடல் போன்ற வேதங்களும், எவை யென்னில், எவ்வுலகத்திலேனும் இனி இல்லாதனவேயாம், என்னும் தோற்றம் இவன் பேசிய சொற்களாலே வெளிப்படையாயிற்று அன்றோ! சொல்லின் செல்வம் வாய்ந்த இவன், பிரம்மதேவனோ, ரிஷபத்தை வாகனமாகக் கொண்ட சிவபிரானோ, வேறு யாரோ.]

வேறுயாரோ என்றதில் திருமாலாகிய தன்னையுஞ் சேர்த்தே அயிர்த்தானன்றி விட்டுப் பேசினானல்லன், என்பது பின்னர், முதல்வராய மூவரும் இவனுக்கு நிகரில்லைஎன்றுசாற்றுகின்றமொழிகளால் தெரியவருகின்றது. இதனைக் கேட்ட இளைய வீரனுக்கு, அளப்பரிய இப்புகழின் பொருள் யாதென விளங்கிற்றில்லை போலும். தன் பிறப்பும் பெயரும் அனைய சில சிறிய செய்திகளைத் தெரிவிக்க ஒருவன் கலையெல்லாங் கற்று வேதக்கடலையுங் கடந்து வருதல் வேண்டுமோ என்னுமோர் சிந்தனைக்குரிய வியப்பில் இலக்குவன் இருந்தானென்னில் யாரும் அவனைக் குறிப்பறியமாட்டாதவன் என்று கொள்ளமாட்டார். இத்தனையே இயம்பிய அம்மாணியின் தோற்றத்தில் விரிஞ்சனோடு விடைவலானை எங்ஙனங் காண்குவான்? எனின், தன்னுடன்ஒத்துவியந்த ஊக்கத்தின் குறிப்பொன்றுந் தம்பியில் முகத்தில் தோன்றாமையாலோ, மீண்டும்,

மாணியாம் படிவ மன்று
 மற்றிவன் வடிவ மைந்த
வாணியில் வுலகுக் கெல்லா
 மென்னலா மாற்றற் கேற்ற
சேணுயர் பெருமை தன்னைச்
 சிக்கறத் தெளிந்தேன் பின்னர்க்
காணுதி மெய்ம்மை யென்று
 தம்பிக்குக் கழறிக் கண்ணன்

[மைந்தனே, இவனது உண்மை வடிவமானது ஒரு பிரமசாரியின் வடிவமேயன்று. மற்று, இந்த உலகங்களுக்கெல்லாம் ஓர் அச்சாணி யென்று சொல்லத்தக்க ஆற்றலுக்கு எற்றதான ஒரு மிகவும் உயர்ந்த பெருமையை நான் இவன்பால் சந்தேகமறக் கண்டு தெளிந்துகொண்டேன், அதன் உண்மையைப் பின்பு நீ காண்பாய், என்று இராமன் தன்தம்பிக்கு எடுத்துக் கூறி]

மற்றுமிவ் வுலகத் துள்ள
 முனிவர்வா னவர்க ளாரிச்
சொற்றிற முடையார் மற்றுச்
 சுருதியின் றொகுதி யாவு
முற்றறி தருமிம் மாணி
 மொழிக்கெதிர் முதல்வ ராய
பெற்றியர் மூவர்க் கேயும்
 பேராற்ற லரிது மன்னோ.

[பின்னும், இவ்வுலகத்தின்கண் உள்ள முனிவர்களுக்குள்ளும்,மேலுலகத்தில்உள்ளதேவர்களுக்குள்ளும், இத்தகைய சொல்லின்திறமை வாய்ந்தவர் யார் இருக்கின்றனர். அன்றியும், வேதங்களின் தொகுதியை எல்லாம் முழுவதும் அறிந்தஇந்தப் பிரம்மச்சாரியின் மொழிகளுக்கு எதிராக,முதன்மைத் தன்மை வாய்ந்த மூன்று மூர்த்திகளுக்குங்கூட வலிமையுடன் நிற்பது அரியதாம்]

எனச் சாற்றினான். அநுமனை இவ்வண்ணம்வரம்பின்றி வியந்துகூறிய பொம்மல்வாசகம் இலக்குவன் மனத்தில்எவ்வகைஎண்ணங்களை எழுப்பியிருத்தல்கூடும் என்பதை மதிக்க இயலவில்லை. "பின்னர்க்காணுதி" என்றதினின்று, இப்பொழுது இராமனது சொற்களுக்கிணங்கித் தானும் அனுமனைவியந்த குறியொன்றும் இலக்குவன் முகத்தில்காணப்படவில்லை என ஒருவாறு ஊகிக்கலாம். இராமனது சொற்களை அப்படியே முழுவிலைக்கு ஏற்றுக்கொள்ள இளையவன் சற்றே தயங்கினான் எனின் அதுவும் பொறுக்கற்பாலதே. யாரும் சொல்லவல்லாததது யாதோ, தான் கற்றுக்கடந்த வேதக் கடலின்று அனுமன் இன்று இயம்பிவிட்டான்? முன்னே தன்முன், வஞ்சியென நஞ்சமென வந்த அச்சூர்ப்பணகையை இராமன்,"ஏது பதி ஏது பெயர்" என்று வினவியபோது, வஞ்சமகளேனும் அவள்,

பூவிலோன் புதல்வன் மைந்தன்
 புதல்விமுப் புரங்கள் செற்ற
சேவலோன் றுணைவ னான
 செங்கையோன் றங்கை திக்கின்
மாவெலாந் தொலைத்து வெள்ளி
 மலையெடுத் துலக மூன்றுங்
காவலான் பின்னை காம
 வல்லியாங் கன்னி யென்றாள்

[தாமரைமலரில் வீற்றிருக்கின்றபிரமனது புத்திரனான புலஸ்த்தியனுடைய புத்திரனான விச்ரவசு என்பவனுக்கு மகள். திரிபுரங்களை எரித்தவனும் ரிஷபத்தை வாகனமாக உடையவனும் ஆகிய சிவபிரானுக்கு நண்பனும் சிவந்த கைகளையுடையவனும் ஆகிய குபேரனுக்குத் தங்கை. திக்குயானைகளை எல்லாம்வென்று, கைலாயமலையைப் பெயர்த்து, மூன்று உலகங்களைக் காவல்செய்யும் இராவணனுக்குப் பின்பிறந்தவள். காமவல்லி என்ற பெயருடைய ஒரு கன்னி ஆவேன் நான்]

என்று இயம்பிய நயத்தில் எச்சிறு பங்கும் இவ்வனுமன் வாசகத்தில் அமையக் காண்பதே முதற்றேவர் மூவர்க்கும் அரிதெனல் வேண்டும். சொல்லின் செல்வி யென்று அவளை யாதும் வியந்திலன் இவ்விராமன். "தேவ" என்று தம்மைத் தெரிந்தழைத்ததால், தன தண்ணன் இங்ஙனம் நெடிது வியக்க நேர்ந்தனனோ என்ன இலக்குவன் சிந்திப்பானாயின், முன்னாள் நற்றவப்பள்ளி வாயிலை நண்ணிய குகன், "இறைவா நன்றே வந்தேன் நாயடியேன் யான்" என்று,

கூவ முன்ன மிளையோன் குறுகிநீ
யாவன் யாவென வன்பி னிறைஞ்சினன்
தேவ நின்கழல் சேவிக்க வந்தன
னாவ வேட்டுவ னடியே னென்றான்

[அவ்வாறுகூப்பிட, முதலில் இலக்குவன் வெளிவந்து, 'நீயார், வந்தகாரியம் யாது' என்று வினவலும், குகன் அவனை அன்பினோடு வணங்கி, "தேவனே, நாய்போன்ற அடிமையாகிய நான், ஓடம் செலுத்துகின்றவேடன், உன் பாதங்களைச் சேவிக்க வந்தேன்.]

என்று கூறக் கேட்டுளன் ஆதலின், இன்று இவ்வனுமன், 'தேவ' என்று அழைத்ததில் புதியதோர் வேதப் பொருள்காணும்வகை யறியாமல் திகைத்திருப்பான் இலக்குவன். சொல்லின் திறமையளவே நோக்குமிடத்தும், முன்னே தன்னை நாடிய அயோமுகியை, "யாவளடீ உரைசெய் கடிது" என்று இவன்,

பேசின னங்கவள் பேசுற நாணாள்
ஊசலு முன்றழி சிந்தைய ளாந்தாள்
நேசமி லன்பின ளாயினு நின்பால்
ஆசையின் வந்த வயோமுகி யென்றாள்.

[கேட்க, ஒருவழிப்படாமல் ஊசலாடி வருந்துகின்ற சிந்தையையுடையவளாகி,தன் நிலையைப் பேசுவதற்கு நாணமல், "நேயமில்லாத அன்புடையவளாயிலும், உன்னிடத்து ஆசையோடு வந்த அயோமுகி நான்"]

என்று அக்காமுக அரக்கி கூறிய சொற்களில் அடங்கிய அளவு பொருட்செறிவும் உள்ளக் கிளர்ச்சியும் இங்கிவ் வனுமனது மொழிகளில் காணக்கிடக்காமலிருக்க, இராமபிரான் அவைகளை வியந்தவண்ணமே இலக்குவன் தானும் மனமெழுந்து எங்ஙனம் கிளர்தல் கூடும்!

குறையில்லாக் கல்வி

முற்காலங்களிற் புலிகள் புல்லை தின்று வாழ்ந்தன.

இதனைக் கண்ட வோர் பூனை, "எலியும் குருவியும் எனக்கு இத்தனை கிடைக்க, வலிமை வாய்ந்த இப் புலிகளின் தலையில் புல்லையே தின்னவோ எழுதியிருக்கின்றது" என்று மிகவும் இரக்கங் கொண்டது. எலியைத் தான் தின்று இன்புற்றபோதெல்லாம் புல்லேதின்னும் புலியை நினைத்து நினைத்து, "ஐயோ, பாவம், இந்தப் புலிகளுக்கு எந்த விதத்தில் நான் உபகாரம் செய்வேன்" என்று நெடுங்காலம் ஏங்கியிருந்தது பூனை.

அப்படியிருந்தபோது ஒருநாள் அப்பூனையானது புலிகளின் அரசனைச் சந்திக்க நேர்ந்தது. புல்மேய்ந்து கொண்டிருந்த அப்புலியரசனை நோக்கி, "ஆடுமாடுகளைப்போல் புல்லைத் தின்கின்றாயே. உனக்குச் சிறிதேனும் மானமில்லையா? நான் சொல்வதைக் கேட்பாயானால், மிருகங்களைப் பிடித்துத் தின்ன உனக்கு நான் கற்றுத்தருவேன். அப்பொழுதுதான் நீயும் உன் இனத்தவர்களும் முன்னேற்றம் அடைந்தவர்கள் ஆவீர்" என்று பூனைகூறியது. புலிகளுக்கரசன் இதற்குஉடன்பட்டுப் பூனையினிடத்தில் பாடங்கள் கற்க ஆம்பித்தது.

இவ்விதம்ஆசிரியனான பூனை தன் மாணவப்புலிக்கு வித்தைகள் போதித்துவந்தது. சில நாட்களுக்குள் பாயவும் பதுங்கவும் தாவவும் குதிக்கவும் கவ்வவும் ஆகிய இவைகள் எல்லாம் புலியினால் நன்கு கற்றுக் கொள்ளப்பட்டன. தன் மாணவனது ஊக்கத்தைக் கண்டு ஆசிரியப்பூனை அடைந்த மகிழ்விற்கோ அளவில்லை.

இப்படியிருக்க ஒருநாள், பாடம் கற்க வந்த புலி தன் ஆசிரியன்மீது பாயத்தலைப்பட்டது. பார்த்தது பூனை; பாய்வதும் பதுங்குவதும் ஓடுவதும் இனித் தன்னிடம் பாடங் கற்றிருக்கின்ற புலியினிடத்தில் பயன்படாது என்பதை அறிந்து விரைந்து தாவி ஒரு மரத்தின்மேல் ஏறிக்கொண்டுவிட்டது. புலிக்கோ மரமேற முடியவில்லை. ஆகையால், "ஏ, பூனையே, கீழே இறங்கு" என்று அதட்டியது அந்தப் புலி.

அப்பொழுது அந்தப் பூனை, "ஏ, மாணவப் புலியே, அவசரப்பட்டுவிட்டாய். மரமேறவும் நானுனக்குக் கற்றுக்கொடுப்பதன்முன் நீ உன் அரைகுறைக் கல்வியை என்னிடத்திலேயே காட்டப் புகுந்ததால் தான் நான் இன்று பிழைத்தேன். புல்லருக்கு இனி ஒன்றுஞ் சொல்லித்தரலாகாது என்பதும் உணர்ந்தேன்" என்றது.

"புல்லைத் தின்று வாழ்ந்திருந்த எனக்கு நீ பொல்லாதவைகளைச் சொல்லித் தந்ததுமன்றி, அதனையும் முழுவதுங் கற்பிக்காமல் வஞ்சனையும் செய்தாய்" என்று ஏசியது புலி.

"பொல்லாதகல்வியும் நிறையக் கொள்ளாத குறை இதுஆயினும், ஆசிரியனையேநீகொல்லவந்தாயாதலால், இனி, நீ பசித்தாலும் புல்லைத் தின்னுமல் கிடக்கக்கடவாய்" என்று பூனை சபித்தது.

"புதுக் கல்வியால் பொல்லாதவனுகி உயிர்களைக் கொன்று வாழும் பழியே பெற்றேன். அதுவுமன்றி பின்னொருநாள்நல்லவனுகஇயலாவண்ணம்என்பழைய இயற்கையையும் அடியுடன் இழந்தும் விட்டேன்" என்று எண்ணியவாங்கே சென்றதாம் அந்தப் புலி.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
ஸ்டச்யாவனப்ராசா ஸ்டமிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்தது) ஸ்ட. மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
ஸ்ட. ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசேர்ந்த சிறுமணக்கு எண்ணெய் காஸ்ட்ராலகஸ்
ஜ்வரேக
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

சிலையில் ரத்தம்:—இத்தலி நாட்டில் அஸ்டி என்ற ஊரில் உள்ள மடத்தில் உள்ள சிறுவையில் அறைபட்ட கோலத்தில் விளங்கும் கிறிஸ்து நாதரின் சிலையிலிருந்து இரு முறை ரத்தம் வருவதைக் கண்டார்களாம். அந்த ரத்தத்தைச் சோதனை செய்ததில் அது மனித ரத்தம் போலவே யிருக்கிறதாம்.

* * *

கணவனின்றிக் கர்ப்பம்:—அமெரிக்காவிலுள்ள ஒரு பிரபல ஸ்திரீ வைத்தியர் சில காலமாகச் செயற்கை முறையில் சுக்ல சுரோணித சேர்க்கையால் குழந்தைகளை உற்பத்தி செய்ய முடியுமாவென்று பரீட்சை பார்த்துவந்தார். அவருடன் இன்னொரு சாஸ்திர நிபுணரும் இதேதுறையில் ஆராய்ச்சி செய்து வந்தார். இப்போது அவர்களுடைய பரீட்சையின் பலனாக ஒருத்திக்கு இரட்டைப் பிள்ளைகள் செயற்கை முறையில் பிறந்திருக்கின்றனவாம். சாஸ்திர தோரணையில் 13 ஸ்திரீகளுக்குக் கர்ப்பத்தை உண்டுபண்ண முயன்றதில் 8 தடவை கர்ப்பம் உண்டுபண்ண முடிந்தது. வர்த்தகம் நடத்திவரும் இரண்டு பிரபல கன்னிகைகள் இப்புதிய முறையால் குழந்தைபெற ஆவலாயிருந்தனர். அதில் ஒருவருக்கு இப்பொது 9 மாதக் குழந்தை யிருக்கின்றது. விவாக மாகாத மற்றொரு பெண்ணுக்கு இன்னும் இரண்டொரு மாதங்களில் குழந்தை பிறக்கும்.

* * *

சிங்களர் பூர்வோத்திரம்:—சிங்களவர்கள் ஆதியில் எந்த ஊரிலிருந்து வந்தவர்களாவாரென்பதைப்பற்றி இன்னும் திடமான முடிவு ஏற்படவில்லை. இவர்கள் இந்தியாவிலிருந்து போனவர்களென்பது மாத்திரம் தெரிகிறது. ஆனல் இந்தியாவின் எந்தப் பாகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுதான் தெரியவில்லை. டாக்டர் மகமது ஷகிதுல்லா என்பவர் சிங்களர் பேசும் பாஷையை நன்ருக ஆராய்ச்சிசெய்து இவர்கள் வங்காளத்திலிருந்து வந்தவர்களென்று சொல்லுகிருர். ஆதி சிங்கள ராஜாவாகிய விஜயா என்பவர் முன் கூர்ஜரத்தில் இருந்து சென்றதாகச் சிலர் கருதுவது சரியில்லை யென்று இவர் கூறுகிருர். விஜயா முதலில்வங்காளத்திலிருந்து புறப்பட்டபொழுது இலங்கையில் சாசுவதமாகத் தங்க விரும்பவில்லையென்றும், ஊரை ஜயித்த பிறகே தன் பரிவாரங்களுடன் சாசுவதமாக இலங்கையில் தங்கிவிட்டதாகவும் டாக்டர் ஷகிதுல்லா இந்தியச் சரித்திர மென்னும் மாதப்பத்திரிகையில் எழுதியுள்ளார். சிங்களபாஷை வங்காளம், கூர்ஜரம்,பாலி,தமிழ்ப்பாஷைகள் கலப்புள்ள தென்றும் 2500 வருஷங்களாக அது வழங்கிவருகிற தென்றும் தெரிகிறது.

* * *

நமது மாதரின் சேலைகள்:—இந்தியாவில் ஸ்திரீகள் உடுத்தும் சேலையின் அழகைப்பற்றி லக்ஷ்மணபுரியிலிருக்கும் கல்வி இலாகா டைரக்டர் மிஸ்டர் எ. எச். மக்கெண்டி பின்வருமாறு எழுதியிருக்கிருர்:—

இந்திய மாதர்கள் உடுத்தும் சேலைகளில் ஒருவித வசீகரம் இருக்கிறது. அதன் காரணம் என்னவென்பதைக் குறிப்பாகச் சுட்டிக்காட்ட முடியாமலிருக்கின்றது. இந்தியாவின் ஒவ்வொரு ஜாதியினரும் அதனை வெவ்வேறுவிதமாக உடுத்துகின்றனர். சிலர் தலைமீது முட்டாக்கைப் போடுகின்றனர். சிலர் தலைக்குச் சேலையைக் கொண்டு போவதேயில்லை. சிலர் இரண்டு தோள்மீதும் மேலாக்கைப் போடுகின்றனர். சிலர் வலது தோள்மீதுமாத்திரம் கொண்டு போகின்றனர். வேறு சிலர் இடது தோள்மீது மேலாக்குப் போடுகின்றனர். வேறு சிலர் இடுப்பைச் சுற்றிக் கொண்டுவந்து மடியாகச் செருகிக்கொள்ளுகின்றனர். இன்னுஞ் சிலர் பின்புறமாகச் செருகி முடிகின்றனர். நிறத்திலும் அநேக விதச்சாயப் புடவைகள் இருக்கின்றன. வானவில் வர்ணங்கள்யாவும், வயல்களில் புஷ்பிக்கும்மலர்கள் நிறம் பலவும்உள்ள புடவைகளைக் காணலாம். இத்தனை வித்யாச மிருந்தும் இந்தியமாதர்கள் எல்லோரும் சேலைதான் உடுத்துகின்றனர். அதனை அவர்கள் வசீகரமாக உடுப்பதே முக்கிய விசேஷமாகும். கூலிப்பெண்ணை யிருப்பினும் மகாராணியா யிருப்பினும் அவர்கள் சேலை கட்டியிருப்பதைக் கண்டால் அவர்களிடம் சாந்த குணமும் பெருந்தன்மையும் இருப்பதாகப் புலப்படுகிறது.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.

All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

T. ANANTACHARI, Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.

Please apply for particulars to:—

T. ANANTACHARI, Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

கோடையின் கொடுமை

நீங்கள் ஆயுர்வேத முறைப்படி செய்யப்பட்ட
எங்களுடைய
மணி தைலத்தை
உபயோகித்தீர்களா?

மூளையைக் குளிரச்செய்து கை கால் கண்களின் எரிச்சலைச் சமனஞ்செய்து தலை மயிரை நீண்டு வளரும்படி செய்யும். உடனே வாங்கி உபயோகியுங்கள்.

5 தலம் தைலங் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1.

இனும்! கேட்லாக். இனும்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)